தேவமாதா துணை.

சகல நாடகக் கம்பேனியார்களும்
பாடி நடித்துவரும்

ஞானசௌந்தரி

ச. சு. சங்கரலிங்கக் கவிராயரவர்களின் மாணவர்



மதுரை K. குற்றாலப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

ரத்தின நாயகர் ஸன்ஸ்
அவர்கள் வெளியிட்டது.

[விலை 0-4-0.

தேவமாதா துணை.

K. S. செல்லப்பா அய்யர், K. S. அனந்தநாராயண அய்யர்,

S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்,

P. S. வேலுநாயர், S. R. கமலம்

மதுரை, ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனி,

ஸ்ரீ பால விநோத நாடக சபா

இவர்களால் நடத்திவரும்

ஞானசௌந்தரி

உடுமலை ஸ்ரீமான் சரபகவி மாணவரும்

சென்னை, ஸ்ரீ பாலவிநோத நாடக சபாவின் ஆசிரியருமான

ச. சு. சங்கரலிங்கக் கவிராயரவர்களின் மாணவர்

முத்தமிழ் க்ஷேத்திர மதுரை

K. குற்றாலம்பிள்ளை அவர்களால்

இயற்றியது.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

திருமகள்விலாச அச்சியந்திரசாலை,

சென்னை.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1932 [விலை அணு 4.

ஆக்கியோன் வாக்கியம்

கடல்சூழ்ந்த உலகின்கண் ஜாதிமதக்கோட்பாடுகள் பலவுளன. இருப்பினும், ஜாதி இரண்டென்பது யாவரும் அறிந்ததே. மதவேறுபாடுகளில் வெவ்வேறு மதங்கள் தோன்றி ஜனங்கள் தத்தம் ஆசார முறை தவறாமல் அநுசரித்துவருவதில் கிறிஸ்துவ மதமென்று ஒன்றுண்டென்பது இனிது விளங்க நமது ஞானசௌந்தரி என்னும் நாடகமே நிரூபிக்கவல்லது. இச்சரிதையைப் பல நாடகக் கம்பெனியார்களால்நடத்தியிருப்பினும், எனதுஆசிரியரான ஸ்ரீமான், ச. சு. சங்கரலிங்கக் கவிராயரவர்களின் பேருதவியினால் இதை எழுதத் தொடங்கினேன். இதிலுள்ள பாடல்கள் என்னா லெழுதப்பட்டவைகளே. மேலும் இதிலடங்கியுள்ள எல்லா வசன நடைகளும் பாட்டுகளும் கிறிஸ்த்துமதத்தை யனுசரித்து புதிய வர்ணமெட்டுகளால் அமைத்துளேன். இதைக் கண்ணுறும் ஆன்றோர்களனைவரும் குற்றத்தைக் களைந்து குணத்தைக் கைக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

அன்பன்:

மதுரை K. குற்றாலம்பிள்ளை.

நாடகப் பாத்திரங்கள்:

1	தருமராஜன்	உரோமாபுரி அரசன்
2	லேனாள்	உரோமாபுரி அரசன் இரண்டாவது மனைவி
3	ஞானசௌந்தரி	தருமராஜன் முதல் மனைவியின் குமாரத்தி
4	சிமியோன்	எகிப்து தேசத்து அரசன்
5	மதலை	எகிப்து தேசத்து அரசனுடைய மனைவி
6	பிலேந்திரன்	எகிப்து தேசத்து அரசனின் குமாரன்
7	சுல்த்தான்	துருக்கி அரசன்
8	தேவமாதா	கிறிஸ்தவர்களின் முதற்கடவுள்
9	ஞானி	பாதிரி (அல்லது) குரு
10	குடிகள்	

சேவகன், கொலையாளிகள், தருமராஜன், மந்திரி முதலியவர்கள். மற்றவர்கள் சமயோசிதம்.

கதை நிகழ்ந்த இடம்:

உரோமாபுரி, எகிப்து தேசத்தின் வனம்.

தேவமாதா துணை.

ஞானசௌந்தரி

தருமராஜன் தேசவிசாரணைச் சபை.

சீன்—1. இடம்—2. உரோமாபுரி.

பாத்திரங்கள்-தருமராஜன், மந்திரி, சேவகன், லேனுள், ஞானம்.

தருமராஜன் தரு

(ஜெகன்மோகன சுகுணசிங்காரி என்ற மெட்டு)

இராகம்-ஸ்ரீராகம், தாளம்-ஆதி.

பல்லவி

* கார்த்தருள்புரிநீ கர்த்தனே
இத்ததி உன் திருபதமலர் பணிந்தேன் (கா)

அநுபல்லவி

கருணாகரக் கடவுள் நாதா
வருவாய்ததி யேசு நாதா
வரம்பெற்றிடும் தாமுற்றிடும்
அருளுற்றிடும் வாசற்குண
கதி-புரி-நீயே வரந்ததி (கா)

சரணம்

காவாவரந்தாதாயெனைப் பாராயேசுநாதா உனை
கர்த்தனேமகனெனவுலகில் துதித்தேனேஎன் திருமனதில்
கனந்தங்கிய குரு சங்கர
லிங்கம்பங்கினில் தினம் நின்றுமே (கா)

தருமராஜன்:—பிரதான்! அமருவீர். மந்திரி! நம்முடைய ராஜ்யத்தின் திருத்த முறைகளைப்பற்றி அறிய விரும்புகின்றேன் தெரிவிப்பீர்.

மந்திரி:—அப்படியே;

தருமராஜன் விருத்தம்

சங்கராபரணம்.

செழிப்புறு நமதுராஜ்யம் செல்வமுற் றிருக்குமாறும்
கழிப்புட னெனதுசெங்கோல் கனிவுடன் துலங்குமாறும்
பொழிப்புறக் குடிஜனங்கள் பொங்கியே புகழுமாறும்
விழிப்புடன்வந்த யேசுநாதனைப் பணிந்தே னந்தோ.

---

* இப்பாட்டில் முதலில் அநுபல்லவி எடுத்துப் பாடிவந்தால் சபை யலங்காரமாக இருக்கும்.

தருமராஜன் தரு

(இங்குவந்த என்புருவை என்ற மெட்டு)

காலையிலெழுந்துஜனம் கர்த்தனையே தினந்தினம்
ஆலயபூஜையற்பணம் சாலவே துதிக்கின்றாரா (கா)

தரும:—நமது நாட்டிலுள்ள பிரஜைகளெல்லோரும் நாள்தோறும் நமது வழிபடு கடவுளாகிய தேவமாதாவைத் துதித்து வருகின்றார்களா?

மந்திரி தரு

(ஷை மெட்டு)

காருண்ய தேவனை ஜனம்
கருணையுடன் தினந் தினம்
தாரணிதன்னிலே ஜெபம்
துதிபுரிகின்றார் நிதம் (காரு)

மந்:—அரசே! நமது நகரிலுள்ள பிரஜைகளெல்லோரும், நாள் தோறும் தவறாமல் தேவமாதாவைத் துதித்து வருகின்றார்கள்.

தரும:—நல்லது மெத்த சந்தோஷம்.

[குடிகள் முறையிடல்]

குடிகள் தரு

(காருவிறை கோண்டு என்றமெட்டு)

சிங்கம் புலியானை கரடி செந்நாய்வந்து
எங்கபயி ரெல்லாம் பாழாக்குது
எங்க செடிப்புதரில் தங்கிடுது-எமைப்
பங்கப்படுத்த ஓடி வந்திடுது (சிங்)

நாங்க என்ன செய்வோம் மகராஜாவே
எங்க நஞ்சை புஞ்சையெல்லாம் பாழாக்குது
பாங்கான காய்கனி தின்னிட்டுது
எங்க பங்காளி ஒருவனைக் கொண்ணுட்டுது (சிங்)

குடிகள் வசனம்

மகராஜ்! நாங்களிட்ட பயிர்களை எல்லாம் பாழுமிருகங்கள்வந்து நாசஞ் செய்கின்றன.

தருமர் வசனம்

நல்லது குடிகாள்! நீங்கள் சென்றுவாருங்கள். நான் சென்று வேட்டையாடி உங்கள் குறைகளை எல்லாம் தீர்த்துவிடுகின்றேன்; அச்சம் வேண்டாம். [குடிகள் போய்விட்டார்கள்]

தரும. வ-ம்:—மந்திரி! நமது குடிஜனங்களின் குறைகளை நிவர்த்தி செய்யும்பொருட்டு நான் வேட்டைக்குச் செல்லவேண்டு மாகையால், வேடுவர்களிடம் சொல்லி, அதற்கு வேண்டிய ஆயுத முதலிய சாமான்களைத் தயார் செய்து வைக்கும்படி சொல்லுங்கள், நான் அந்தப்புறஞ் சென்று வருகின்றேன்.

[லேனாள் அந்தப்புறம்]

(இன்பதுரை மாக்ஷிமன்னன் என்றமெட்டு)

பல்லவி

* என்றுகாண்பேனோ நின் சேவையை
ஈடில்லாக் கண் காக்ஷியை (என்)

அநுபல்லவி

அன்னைமரித்தாயே உந்தன் அடிபணிந்தேன் சுந்தரி
என்னையாளாயித்தருணம் இகபரந்தந் தாதரி (எ)

ஜோதிப்பிரகாசத் தாயே சுந்தரி அன்னை மரியாயே
கியாதிபெற்ற நீதியுற்ற நிமலியே கிருபாலியே (எ)

லே. வ-ம்:—பிராணநாதா! அடியாள் நமஸ்கரிக்கின்றேன்.

தரும. வ-ப்:—காதலி! மங்கள முண்டாகட்டும்

லே. வ-ம்:—நாதா என்ன இது! தங்கள் முகம் ஒருவாறு வாட்டமுற்றிருப்பதாகத் தெரிகின்றதே விஷயமென்ன? அடியாள் அறியக்கூடாதா?

தரும. வ-ம்:—பிராணசகி! நீ கேட்டபடி விஷய மொன்றிருக்கிறது, உனக் குரையாமல் யாருக் குரைக்கப்போகின்றேன். சொல்லுகின்றேன் கவனி.

தருமராஜன் தரு

(நிச்சயமாய்த் தீர்க்கக்கடன் என்றமெட்டு)

இராகம்-தன்யாசி, தாளம்-ஆதி.

பல்லவி

இத்ததி குடிகள் வந்து கத்தியே மனமும்நொந்து
கதறிப்புகன் றுருகந்து (இத்)

அநுபல்லவி

காட்டில்வாழ்நம்குடிகள் இட்டபயிர்களெல்லாம்
காட்டில்வாழ் விலங்கினங்கள் கடித்தழித்ததனாலே

* இப்பாட்டில் அநுபல்லவி எடுத்துப் பாடவும்.

கழறினே னுந்தன் முன்னலே வேட்டைக்குச்சென்றுமீண்டு
வீட்டிற்குவரும்வரையில் தாட்டிகமாயெந்தன்சொல்லை
கேட்டிடுவாயடிமானே காட்டிற்கேகிவருவேனே (இத்)

தரு. வ-ம்:—காதலி! யான் தற்சமயம்சொல்லும் வார்த்தையைக் கவனித்து அதன்படி நடப்பாயென்று எண்ணியே உன்னிடம் வந்து புகலவேவந்தேன் கண்மணி.

லே. வ-ம்:—காதலா! என்ன இவ்விதம் புகன்றீர்களே இதுவரையி லும் தங்கள்வார்த்தைக்கு எதிர்த்து மறுமொழி புகன்றதுண் டா? அல்லது தங்கள் இஷ்டத்திற்கு விரோதமாக நடந்ததுண் டா? இவ்வாறிருக்கத் தாங்கள் இவ்வித முகவாட்டத்துடன் வரக்காரணமென்ன? அவ்விதம் எண்ணவேண்டாம், எதுவாகு லும் அடியாள் மனமகிழ்ச்சியுடன் செய்யச்சித்தமாய்க் காத்துக் கொண்டிருக்கின்றேன் நாதா.

தரு. வ-ம்:—பெண்மணி! நீ மகா சாமர்த்தியசாலி. மேலும் கணவ னுடைய காரியமே பெரிதென்று வழுவாது அதன்படி நடந்து கொள்ளுவாய் என்றே உன்னிடம் சொல்லவந்தேன்; சொல்கின் றேன் கவனி.

விருத்தம்-தன்யாசி

நம்ஜனக் குடிகளிட்ட நற்பயிர் தழைகளெல்லாம்
தம்மின விலங்கினங்கள் தாவியே அழித்ததாலே
கும்பலாய்ச் சென்றுவேட்டை யாடியேவரும்வரைக்கும்
தெம்புடன் சோர்வில்லாமல் ஞானத்தைக் கார்ப்பாய்பெண்ணே.

தரு. வ-ம்:—கண்மணி! நமது நாட்டிலுள்ள குடிகளிட்ட பயிர்களை எல் லாம் காட்டிலுள்ள துஷ்டமிருகங்கள் வந்து அழித்ததுமன்றி, குடிகளையும் பலவாறு இம்சை செய்து துன்புறுத்துவதால் நான் வேட்டைக்குச் சென்று வரும்வரை நமது அருமைக் கண் மணியாகிய ஞானசௌந்தரியை வெகு ஜாக்ரதையாகப் பாது கார்ப்பாயென நம்புகின்றேன்.

லேனாள் விருத்தம்

சக்களத்தி பெற்றபிள்ளை எனக்குமுன் சொந்தமல்லோ
இக்களகல்மி சமேன் ஞானத்தாய் என்தமக்கையன்றோ
பக்கன வாய்திறந்து பதறியே சொல்வதேனோ
இக்கண மிடைவிடாமல் என்பிள்ளைபோலே கார்ப்பேன்.

லேனாள். வ-ம்:—காதலா! என்ன இது இவ்வாறு இயம்பினீர்களே? நான் பெற்றால்தானு பிள்ளை. அவளை நான் வஞ்சனை செய் வேனு? அவ்விதம் எண்ணுதீர்கள், தங்களைப்பார்க்கிலும் பதின்

மடங்கு ஞானத்தின்மேற் எனக்குப் பிரியமாயிற்றே! குழந்தையைக் காணாமல் அரைக்ஷணம் இருக்கமாட்டேனே தாங்கள் சென்று வரும்வரை அதிஜாக்ரதையாய் பாதுகார்த்துக் கொள்கின்றேன். போய்வாருங்கள்.

தரு. வ-ம்:— நாயகி! நீ கூறுவதெல்லாம் உண்மையே இருந்த போதிலும்,

பாட்டு-தர்க்கம் தருமர் தரு

(தாயில்லாபிள்ளை என்ற மெட்டு)

மா தாயில்லா மதலைபாவம்
மயங்கிநின் றழுதால் தாபம்
தாயகியே தயங்கிடாமல்
நாயகியே பாதுகார்ப்பாய் (மா)

லேனாள் தரு

பெற்றால்தானா பிள்ளைநாதா
உற்றாலென்ன சொன்னீர்பாதா
நற்றவஞான் சௌந்தரியை
பெற்றவளே யானும்நீதா (பெ)

தருமர் தரு

என்னைவிட்டுப் பிரியாளென்றும்
அன்னைவிட்ட முதலாய் இன்றும்
சொன்னேன்சகி காதலியே
அன்னமேநீ கார்ப்பாய்நின்று (மா)

லேனாள் தரு

சும்மாசும்மா சொல்லவேண்டாம்
அம்மாவென்று தூண்டவேண்டாம்
அவள்மேலெனக் காசையுண்டு
அன்பரே மகிழ்வீர்கண்டு (பெ)

தரு. வ-ம்:—கண்மணி லேனா! எனது மனம் ஞானசௌந்தரியிடத்தில் எவ்விதம் அன்புண்டாகிறதோ அதுபோல் பதின்மடங்கு உனக்குக் குழந்தையினிடத்தில் பற்றுதலுண்டு என்பதை நான் அறிவேன். இருந்தபோதிலும், யான் சொல்லவேண்டிய முறைக்குச் சொன்னேனே யன்றி வேறில்லை. இதற்காக நீ வருந்தாதே. (சேவகனைப் பார்த்து) அடே! சீக்கிரஞ் சென்று நமது குழந்தையை அழைத்துக் கொண்டு வா?

சேவ. வ-ம்:—நல்லது மகராஜ்! உத்திரவுப்படியே.

[ஞானசௌந்தரி சபைக்குவருதல்]

ஞானம் தரு

(ஜோர் ஜோர் என்ற இந்துஸ்தான் மெட்டு)

பல்லவி

ஆதாரம் வேறில்லை நின்
அப்பனே கார் என் தொல்லை (ஆ)

அநுபல்லவி

பாதாரம் வுன்னை யன்றி
பாரில் தெய்வமில்லை வேதா (ஆ)

சரணம்

பரம பிதா பாதம் பணிந்தேன் குற்றாலன்கீதம்
தற்பரா தயைபுரி சிற்பரா வுனதருள் (ஆ)

ஞா. வ-ம்:—அப்பா! எனப்பா எனை அழைத்தீர்கள்?

தரு. வ-ம்:—கண்மணி ஞானப்! என் சமீபத்தில் வா; அம்மா.

ஞா. வ-ம்:—என்னப்பா! என் தோழிகளோடு நமது நந்தவனத்தில் புஷ்பங்கள் பறித்து விளையாடிக்கொண் டிருக்குஞ் சமயம் சேவகன் வந்து தாங்கள் அழைத்துவரச் சொன்னதாகத் தெரிவித்தான். அப்போதே உடனே ஓட்டமாய் ஓடிவந்தே னப்பா. என்ன சமாச்சாரம் சொல்லுங்க ளப்பா.

தரு. வ-ம்:—என் அருமைக் குழந்தாய்! நமது நாட்டில் வாழும் குடிகளிட்ட பயிர்களைக் கானில் வாழும் விலங்கினங்கள் வந்து நாசஞ் செய்வது மல்லாமல் குடிகளையும் துன்புறுத்தி சிலரைக் கொன்றுவிட்டதாம். இவ் விஷயத்தைக் குடிகள் என்னிடம் வந்து முறையிட்டார்கள். ஆனதினால் யான் சென்று வேட்டையாடி அத் துஷ்ட மிருகங்களை வதை செய்து அவர்கள் துன்பத்தை நிவர்த்தி செய்யவேண்டி யிருப்பதால் இதுவிஷயத்தை உன்னிடம் சொல்லவே உன்னை அழைத்தேனம்மா ஆகையால்,

தருமர் பாட்டு-தர்க்கம்

(எங்கு தாஹினவோ என்றமெட்டு)

கானில் வேட்டை யாடிவாரேன்
கண்மணி வீட்டிலிருப்பாய்
விளையாடியே சிற்றன்னையுடன்—நீ
வீற்றிரு விரைவில் வாரேன். (கா)

ஞானம் தரு

தந்தையில்லா ரண்மனையில்—நான்
 தனித்திருப்பேனோ மனதில்
சஞ்சலமாகத் தோணுதே
 தந்தையேமனம் நாணுதே (தந்)

தருமர் தரு

அஞ்சவேண்டாம் கண்மணியே—நீ
 சஞ்சலம் தீர்ப்பாய் தனியே
கொஞ்சுஞ் சிற்றன்னை யுனையே
 கோதில்லாமல் காப்பாள் சொன்னேன் (கா)

ஞா. வ-ம்:—அப்பா! நான் இங்கு இருக்கவேமாட்டேன்; ஆனதினால் நான்,

(ஷை மெட்டு)

தந்தையே உம்முடன் கூட
 தனயாள் வருவேன் கானிற்கு
விந்தையாய் விலங்கினங்கள்
 வேட்டை யாடுங் காக்ஷிகாண (தந்)

தரும. வ-ம்:—குழந்தாய் ஞானம்! நீ என்னோடு வருகின்றேனென்று ஒரே பிடிவாதம் செய்கின்றாய், அம்மா! கானில் அனேக துஷ்ட மிருகங்களை வதை செய்யப் போவதாலும், மேலும் நீ சிறு குழந்தையா யிருப்பதாலும் மிருகங்களைக் கண்டு பயப்படுவாய்; ஆனதினால், இவ்விடத்திலேயே உனது சிற்றன்னையுடன் மன மகிழ்வுடன் அரண்மனையிலேயே தங்கியிரு. நான் சீக்கிரம்வந்து சேருகின்றேன் விடையளிப்பாய் கண்மணி.

ஞா. வ-ம்:—அப்பா! நான் இதுவரை தங்களைவிட்டுப் பிரிந்ததில்லையே; ஆனதினால், யானும் கூடவருகின்றேனப்பா.

தரு. வ-ம்:—அம்மா! கானில் துஷ்டமிருகங்கள் அதிகம். அவைகளைக் கண்டுபயப்பிடுவாய், சிலசமயம் உன்னைக்கடித்தாலும் கடிக்கும். வேண்டாம் இங்குதான் இருப்பாயம்மா.

ஞா. வ-ம்:—அப்பா! அத்துஷ்டமிருகங்களை எல்லாம் நான் பார்த்திருக்கின்றேன். அது என்னைக்கடித்தால் அடிப்பேன். அப்பாவிடம் சொல்லுவேன்.

தரு. வ-ம்:—என்னம்மா! ஆச்சர்யம் எங்கே பார்த்திருக்கின்றாய்? அரண்மனையைவிட்டு எங்கும் சென்றதில்லையே.

ஞா. வ-ம்:—போ அப்பா! நேற்றையத்தினங்கூட பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் புலிப்பாடம் சொல்லிக்கொடுத்தாரே என் புஸ்தகத்திலே ஒரு பெரியபுலியைக்கூடப் பார்த்தேனப்பா.

தரு. வ-ம்:—(புன்சிரிப்புடன்) பேஷ்! வெகுபுத்திசாலி படத்தில் பார்த்தபுலி உன்னைக்கடிக்குமா? அதற்கு உயிர் உண்டா? வேண்டாமம்மா இங்குதான் இரு. உனக்கு என்னவேண்டும் சொல் கொண்டு வருகின்றேன்.

ஞா. வ-ம்:—எனக்கு ஒன்றும் வேண்டாமப்பா, நானும்தங்களுடன் கூடவேவந்து வனவினோதங்களைப் பார்க்கவேண்டுமென்று ஆவல் உண்டாகிறது; ஆகையால், என்னையும் அழைத்துக் கொண்டு போங்கப்பா.

தரு. வ-ம்:—கண்ணே ஞானம்! நான் உன்னிடத்தில் எவ்வளவு பிரியமாய் இருக்கின்றேனோ அதைப் பார்க்கிலும் உன் சிற்றன்னை பதின்மடங்கு ஆவலோடு உபசரித்து ஆதரிப்பாள்; ஆனதினால், நீ தைரியத்துடன் எனக்கு விடையளிப்பா யம்மா.

[ஞானம் முகவாட்டத்துடன் நிற்கின்றாள். மறைவாய் கேட்டுக்கொண்டிருந்த லேனாள் வருகின்றாள்.]

லேனாள் வசனம்

என் கண்ணே ஞானம்! என்ன இது, இவ்வளவு பிடிவாதத்துடன் கண் கலங்குகின்றாயே; இது உனக்கு அழகா? அப்பா போய் வரட்டும் நான் இருக்கின்றேன்; உன் சேடிகள் இருக்கின்றார்கள். உனக்கு என்ன தேவை; தைரியமாய் அப்பாவை போய்வரும்படி சொல்லம்மா; என் கண்ணல்ல, (சேவகனைப் பார்த்து) அடே! குழந்தையுடன் நந்தவனம் போய் மலர் பறித்துக்கொண்டு வா.

தரு. வ-ம்:—குழந்தாய் ஞானம்! இங்கு வா; காதலி லேனாள்! நீயும் இப்படி வா; நான் வரும்வரை குழந்தை ஞானம்.

தருமராஜன்-பாட்டு

(ரெகுராமா சுகநாமா என்ற மெட்டு)

பல்லவி

கண்மணியே காதலியே (கண்)

அநுபல்லவி

பெண்மணி ஞானத்தையே-நீ
பிரியமாய்க் காப்பாற்றுவாயே (கண்)

சரணம்

சொன்னபடியே செய் யாம லிவட்கு
இன்னல் புரிந்திடில் தெண்டனை யுனக்கு
தன்னின்னல் புரிந்திடில் தாக்குவே னிதற்கு
சொன்னசொல் மாறிடேனே உண்மையதைச் சொல்கிறேன்கேள் ()

தரு. வ-ம்:—காதலி லேனு! நமது அருமையான ஞானசௌந்தரியை அதி ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள். குழந்தாய் ஞானம்! நான் அதி சீக்கிரம் வருகின்றேன் துயருறாதே சந்தோஷமா யிரு அம்மா.

ஞா. வ-ம்:—எனது அருமைத்தந்தை என்னைவிட்டு அரைக்ஷணம் கூடப் பிரிந்ததில்லையே, எவ்வளவு நாளகுமோ அறியேனே, ஏசுநாதா! நீயே துணை. உன்னைத்தவிற வேறில்லை.

ஞானம்-பாட்டு

(நேற்றுராத்திரிப்போன என்ற மெட்டு)

இராகம்-காம்போதி, தாளம்-ரூபகம்.

பல்லவி

என்றும் பிரிந்ததில்லை
என்னன்னை சென்றமுதல்
இன்றுதந்தையைப் பிரிந்தேனே (என்)

அநுபல்லவி

புவியோர்புகழும்பாதா போற்றினேனேசுநாதா
காத்திடுங்கன்னியைநீ கர்த்தனேகண்பார்நீதா (என்)

சரணம்

தந்தைஇன்றுபிரிந்தார் விந்தைமனதில்தந்தார்
வினையென்னவருமோ அறியேனே
இன்னுமென்னகஷ்டமோ ஏசுநாதாஉனதிஷ்டமோ
பாதாஞானத்தைக்காரும் நாதாவினையைத்தீரும் (எ)

சீன்-2. இடம்-உரோமாபுரி தனி அறை.

பாத்திரங்கள்-லேனுள், ஞானம், கொலேனர்.

லே. வ-ம்:—ஹா! ஹா! நான் எவ்வளவு அன்புடனும் ஆசையுடனும் நடந்து கொண்டாலும் எனது கணவருக்கு எப்போதும் அந்தச் சக்களத்திப் பெற்றமகள் ஞானசௌந்தரியின் விஷயமாக என் மேல் சந்தேகமே ஏற்படுகிறது.

லேஞள்-பாட்டு

('மாதவிநீ வந்ததேனேடி என்ற மெட்டு)

இராகம்-புன்னுகவராளி, தாளம்-ஆதி.

கண்ணிகள்

என்னடி இன்னல் புரிந்தேண்டி-உன்
தந்தையிடம் இங்கிருக்கமாட்டேனென்றேண்டி
கூறிஞய்யுனைப் பாரடி
நாரியேஎன்ன சீரடி
நசுக்கியேவுனைத் தொலைக்க
கசக்கியே வாட்டுறேன் பாரு (என்)

அப்பா அப்பா வென்றுகொஞ்சுருள்
அம்மா இறந்தநாள்முத லாகவேமிஞ்சுருள்
ஆசையெல்லா முந்தனுக்கு-நான்
வேசையோடிங் கப்பனுக்குத்
தாசியேவுனைத் தொலைக்கத்
தானுமேயோசனை செய்தேன் (என்)

லே. வ-ம்:—இந்தச் சக்களத்தி பெற்றமகள் ஞானசௌந்தரியிஞலேயே என் குடும்பத்திற்கு இடஞ்சலுண்டாகிறது. மேலும் எப்பொழுது பார்த்தாலும் என் கணவருக்கு ஞானம், ஞானம், ஞானமென்றே புலப்பமாயிற்று. சக்களத்தி பிள்ளை தலைமாட்டிற்குக் கொள்ளி என்பதைப்போல் எனக்கு இவளாலேயே பல துன்பங்கள் உண்டாகின்றது; ஆனதிஞல், இவளை அரண்மனையைவிட்டுத் துரத்திஞல்தான் என் சஞ்சலம் தீரும், இவள் தானே போய் விடும்படியான பல துன்பங்கள் செய்யலாம். இதுதான் நல்ல யோசனை.

[ஞானசௌந்தரி மஞ்சத்தில் அயர்ந்து நித்திரை செய்கின்ருள்]

லேஞள் தனிவசனம் (கோபத்துடன்)

ஆ! ஆ!! என்ன தைரியம், இவ்வளவு நேரமாகியும் அசட்டுத்தனமாய்த் தூங்குகின்ருளே, இவ்வளவு வயதாகியும் என்னவேலை கற்றுக் கொண்டிருக்கின்ருள்.

[லேஞள் மஞ்சத்தினருகிற் சென்று]

அடி ஞானம்! இந்நேரம் வரையில் இப்படித் தூங்குகின்ருயே, வாடி இப்படி, கழுதைக்கு வயதானதைப்போல் ஆகியும் ஒன்றும் தெரியவில்லையே, நன்ருய்ச் சாப்பிடவும் அப்பாகூட எந்நேரமும் கொஞ்சிக் குலாவவும்தான் தெரியும், வீட்டுவேலை ஏதாவது தெரி

யுமா? நாளைக்கு ஒரு மாப்பிள்ளையைக் கட்டிக்கொண்டால் இவைக ளெல்லாம் யார் செய்கிறது, ஏண்டி ஏன், இப்படி ஆந்தைமாதிரி முழிக்கின்றாயே.

பாட்டு-தர்க்கம்

(எங்கிருப்பதுந்தன் நகர் என்றமெட்டு)

லே. வீட்டு வேலைசெய்யாமலே நாயே-காலை
நீட்டியே மஞ்சத்தில் துயின்றாயே

ஞா. வீட்டுவேலை செய்யத்தெரியாது-இது
விந்தையாயிருக்குதே யிப்போது

லே. விவாகமானால்வேலை செய்வதாரு-பாக
நேரமதி லென்குணத்தைப்பாரு

ஞா. என்னகுற்றஞ் செய்தேன் தாயே கோபம்-நான்
அன்னையில்லாப்பிள்ளை பரிதாபம்

ஞான. வ-ம்:—அம்மா! இதுநாள்பரியந்தம் இவ்விதமான வேலைகளை நான் செய்ததேயில்லையே; அன்றியும், தாயில்லாப்பிள்ளை; மேலும், என் தந்தையில்லாத இச்சமயத்தில் என்னை இவ்விதத் துன்பஞ் செய்யலாமா? தாயே என்னை அன்புட னாதரிக்கவேண் டும். என் தந்தை கானகத்திற்குப் போகும்போது சொன்ன வார்த்தைகளை மறந்து விட்டீர்களா? தங்களுக்கு யான் செய்த குற்றமறியேனே. அவ்வாறு ஒன்றும் செய்யவில்லையே; அன்பா யிருந்த தாங்கள் என்னை இப்படி இம்சை செய்வது தர்ம மாகுமா?

லேனா. வ-ம்:—அதெல்லாம் முடியாதடி யம்மா முடியாது! அந்தச் செல்லமெல்லாம் உன் அப்பனிடம். என்னிடம் ஒன்றும் செல் லாது. வா இப்படி; அதோ அந்த விளக்கமாற்றை எடுத்துப்,

லேனாள் தரு

(சீ என்னடா மூடா என்னடா என்ற மெட்டு)

பல்லவி

* பெருக்கடி முற்றம் பெருக்கடி
அடிமூதேவிசண்டாளி குடி
கேடியே யிங்கனம் வீடு (பெ)

* பெருக்கடி என்று முடிந்தவுடன் அதனுடன் வீடு, மூதேவி, சண்டாளி, நீலி, இவைகளைச் சேர்த்துப் பாடலாம்.

அநுபல்லவி

விசிறிக்கரம்பிடித்து விளக்கமாற்றை எடுத்து
சிதறியேகுப்பைகளை உதறியே ஒன்றுசேர்த்துப் (பெ)

நேருக்குநேராகப் பேசுதல் மதமா
நினைத்தபடி நடக்க உனக்குச்சம்மதமா (பெ)

லேனாள் வசனம்

ஆ! ஹா! நீலிக்கும் கண்ணீர் நிமையிலென்பதைப்போல, பாசாங்குக்காரி! ஏண்டி தேம்பித் தேம்பி யழுகின்றாய்? விளக்கமாற்றை எடுத்துப் பெருக்கினால் கேவலா? பெண்ணொன்று பிறந்தால் இதெல்லாம் தெரிய வேண்டாமா? உம், ஆகட்டும்.

[ஞானம் மௌனமாய் நிற்க, லேனாள் விளக்கமாற்றைப் பிடுங்கிப் பெருக்கிக் காட்டுகின்றாள்.)

ஞானத்திற்கும் லேனாளுக்கும் தர்க்கம்-பாட்டு

(பருவகாலத்தை என்ற மெட்டு)

ஞா-தரு. என்னசெய்வேன்விளக்க—மாற்றைக்
கரம்பிடித்து—அறியேன் அறியேன்

லே-தரு. விளக்கமாற்றை—யெடுக்கும்போதே
வேதனையாகுதோடி—விளம்பு விளம்பு

ஞா-தரு. தப்பிதமென்ன செய்தேன்
தாயற்றபிள்ளைநானே அம்மா அம்மா

லே-தரு. தப்பிதஞ் செய்யவில்லை
தனுக்குச்சுந்தரம் வாடி வாடி வாடி

ஞா-தரு. தந்தை யில்லாதவேளை
தற்காருஞ் சிறுமதலை அம்மா அம்மா

லே-தரு. தந்தையில்லையே என்று
தனுக்கிப் பேசுறாயடி சும்மா சும்மா

(லேனாள் ஞானத்தை முகத்தி லிடிக்கின்றாள்.)

லே. வ-ம்:—அடி பாசாங்குக்காரி! உன் வித்தையெல்லாம் என்னிடம் செல்லாது. எங்கே கற்றுக்கொண்டாய் உம்; ஆகட்டும் சீக்கிரம் இன்னும் வேறு வேலைகள் இல்லையா? எனக்கு இதுதானா வேலை? அதைச் செய்; இதைச் செய் என்று சொல்லிக்கொண்டே உன் பின்னாலேயே திரியவேண்டும்போலிருக்கிறதே.

ஞானம்-பாட்டு

(நடந்ததென்ன சொல்லம்மா என்ற மெட்டு)

பல்லவி

தப்பிதமில்லை யன்னையே இந்தப்
பேதையின் மனத் தொல்லையே (தப்)

அநுபல்லவி

குப்பை கூளங்களெல்லாம் கூட்டிப் பெருக்கினேன்
அப்புறப்படுத்தியே அகத்தினி லொதுக்கினேன்
எப்போதுஞ் செய்தறியா ளென்றுமுமக்கு ஞானம்
தெரிந்த விபரந் தானே (தப்)

ஞான. வ-ம்:—அம்மா! இதோ எனக்குத் தெரிந்தவரை செய்து முடித்தேன். என்மேல் ஏன் வீணில் கோபங்கொள்ளுகின்றீர்கள்; வேண்டாமம்மா. (ஞானம் அழுகின்றாள்)

லேனு. வ-ம்:—அடி அசடே! எல்லாம் உனது நன்மைக்குத்தானே. இப்படியல்லவா பெருக்கவேண்டும். வீட்டு வேலைகள் எப்பொழுது கற்றுக் கொள்ளுகின்றது. (சேவகனைப் பார்த்து) அடே சேவகா! கொஞ்சம் நெல்லும், உரலும், உலக்கையும் எடுத்துக்கொண்டுவா சீக்கிரம்.

[சேவகன் உரல், உலக்கை எடுத்துக் கொண்டு வந்து வைக்கிறான்.]

லேனு. வ-ம்:—அடி! இந்த நெல்லை எடுத்து உரலில் போட்டுக் குத்தி உமி வேறு, அரிசி வேறு தனித் தனியாகச் செய் சீக்கிரம்.

ஞான. வ-ம்:—அம்மா! நான் முன்பின் செய்து பழக்கமில்லையே. அம்மா! நான் என் தாய் வேறு தாங்கள் வேறு என்று எண்ணவில்லையே. தாங்கள் என்னை இவ்வாறு துன்பம் செய்யவேண்டுமென்று எத்தனை நாள் காத்திருந்தீர்களோ? தாங்கள் பெற்றால் தானு பிள்ளை? என் அன்னையே! தந்தையில்லா இந்நேரத்தில் என்னை இவ்விதக் கஷ்டம் செய்யலாமா? வேண்டாமம்மா! என்னை மன்னிக்கவேண்டும். (என்று காலில் வணங்குகின்றாள்.)

[நெல்லுக் குத்தல்.]

ஞானசௌந்தரி-பாட்டு

(ஐயோ சிவமே என்ற மெட்டு)

கண்ணிகள்

கருணை நிதியே வருவாய் ததியே
திருவாய் மரியே யிதுவோ கதியே (கரு)

தந்தை யில்லா யிந்த நேரம்
எந்தாய் செய்த துன்பங் கோரம் (கரு)
கல்லோ வுரலில் நெல்லோ மசிய
வல்லோன் செய்த விதியோ அறியேன் (கரு)

லேனு. வ-ம்:—இப்படித்தான் நெல்லுக்குத்துகிறதோ பாரடி யிங்கு (என்று ஞானத்தைச் சௌக்காலடித்துத் தான் குத்திக் காட்டு கிறுள்.) இதுபோலல்லவோ குத்தவேண்டும்

இங்கேவாடி இப்படி இந்தச் சாணத்தில் கொஞ்சம் எடுத்துக் கரைத்துப் புள்ளி விழாமல் நன்ருய் தெளிக்கவேண்டும் தெரியுமா? சீக்கிரம் ஆகட்டும், உடம்பைப் புண்ணாக்கிக்கொள்ளாதே.

ஞானம்-தரு

(துரையே யுமக்கு என்றமெட்டு)

ஈனமுற்றசாணந் தெளிக்கச்
சிற்றன்னையென்னை ஞானமற்றுத் தாவியடிக்க
கியாதியுற்றஎன் தந்தை தனியாகத்தான் விடுத்து
அபிமானமில்லா அன்னை மிரட்டி அடித்துதைக்க (ஈன)

ஞானம்-வசனம்

ஏசுநாதா! முன் ஜென்மத்தில் நான் உனக்கு என்ன பாவங் களைச் செய்தேனே, இச் ஜென்மத்தில் அரசகுமாரியாகப் பிறந்தும், எனது மாதாவை யிழந்து இவ்வித கொடூர மூர்க்கமுள்ள சிற்றன்னை யிடம் கஷ்டத்திற்காளாகி வருந்துகின்றேன். இச் சமயத்தில் உன்னைத் தவிற வேறுதவி யில்லை, நீயே காத்தருளவேண்டும்.

லேனுள்-வசனம்

ஆ! ஆ! என்ன பக்தி! என்ன பாசாங்கு! ஏண்டி, உன்னை யார் என்ன செய்துவிட்டார்கள். தெய்வத்திற்கு முறையிடுகின்ருயே, எருமைக்கடாபோல் நாளுக்குநாள் வளருகின்ருயே, நாளைக்கு ஓர் புருஷனுக்கு உன்னை விவாகம் செய்துகொடுத்தால், பெற்ற தாய் தகப்பனுக்குக் கெட்ட பெயர் வருமே என்று வீட்டுவேலைகள் கற்றுக் கொடுத்தால் கண்ணீர் வடிக்கின்ருயே. கடவுளைத் தொழுகின்ருயே. பேஷ்! நன்ருயிருக்கின்றது. (என்று சவுக்கால் அடிக்கின்ருள்.)

பாட்டு-தர்க்கம்

(ஏனே என்மேல் பழி என்றமெட்டு)

ஞா. அம்மாயேனே யென்னை யடிக்கின்ருய்
லே. சும்மாயேனே மனந்துடிக்கின்ருய்

ஞா. மதலை நானல்லவோ
மனமதுவெறுத்து-மனமிகத்துடிக்கவே (அம்)

லே. தனயாள் நீ சொல்லவோ
தாஷ்டிகமாகவே-வாயது பேசுகிறாய் (சும்)

ஞா. தந்தைகானிற்-கேகிடுஞ்சமயம்
சொன்னசொல் செவியிற்புகவிலையோ

விந்தைய தாகவே
சிந்தையும் நோகவே
வீண்வாது யென்னுடன்
செய்கின்றாய் (அம்)

லே. வாதுநீ ஏன்வாது

ஞா. தீதல்லோ செய்சூது

லே. தீதேவருமினி சீசீ நடநட (சும்)

[வெறுத்துக் கோபித்து]

லே. வ-ம்:—என் முகத்தில் விழிக்காதே ஓடிப்போ நீ எத்தனை நாளைக்கு இப்படி எல்லாம் இருப்பாய் என்று பார்க்கிறேன்.

[ஞானசௌந்தரி போகின்றாள்]

லேனாள்-பாட்டு

(கனகசபாபதி தெரிசனம் என்ற மெட்டு)

பல்லவி

இவ்விதமாய் விட்டுவிட்டால்
எனக்காபத்துக்கள் நேரும்
தப்பிப்ப தெந்தவிதமோ (இவ்)

அநுபல்லவி

தந்தைவந்த தக்ஷணமே
இங்கு நடந்ததையுடன்
இன்பமுறத் தன் தந்தைக்கு
மூட்டியே துன்பஞ்செய்குவாள்
மூதேவியவளைத் தொலைப்பேன் (இவ்)

லே. வ-ம்:—இனி இவளை இப்படியே விட்டுவிட்டால் காட்டிற்கு வேட்டைக்குச்சென்ற தன் தந்தைவந்ததும் நான்செய்துவைத்த துன்பங்களை எல்லாம் சொல்லிவிடுவாள்; அதனால், அவருக்கு கோபம் உண்டாகி என்னைக் கஷ்டத்திற்கு உட்படுத்துவார்; மேலும், என்வயிற்றில் ஒரு குழந்தைபிறந்தால் அக்குழந்தைக்

குப் பட்டாபிஷேகம் கொடுக்கவு மாட்டார். சகல செல்வமும் இவளுடைய தென்பதற்குச் சந்தேகமே இல்லை. நான் இவளுடைய ஆஞ்ஞைக்கு உட்பட்டுத்தான் நடக்கவேண்டும்; ஆனதினால், இப்பொழுதே அடியோடு ஆசாமியை இல்லாமலே செய்துவிட வேண்டும். இதுதான் நல்லயோசனை இப்பொழுதே கொலையாளிகளை த்தருவித்து இன்றிரவு பன்னிரெண்டு மணிக்கு ஞானசௌந்தரி தூங்கும் மஞ்சத்தோடு தூக்கிக்கொண்டுபோய் அவளைக் கழுத்தை வெட்டி எனக்கு அடையாளம் கொண்டு வந்து காண்பிக்கும்படி செய்ய வேண்டும். இதுதான் நல்ல யோசனை. இதோ கொலையாளிகளை இங்கு வந்து போகும்படி கட்டளை யிடுகின்றேன். [போகிறாள்.]

(லேனாள் தனி அறை கொலைஞர்கள் பிரவேசம்)

பாட்டு-தர்க்கம்

(சரி சரி க்ஷாமுத்ரி என்ற மெட்டு)

லேனாள்-தரு

பல்லவி

வருகுவீர் விரைவினிலெங் தனைநாடிவருகுவீர் (வ)

அநுபல்லவி

அதிவேகமா யெனை நோக்கியே
இதுவே தகி பயம் போக்கியே (வரு)

சரணம்

கொலை. எதுவா யிருந்தாலும் சரி
க்ஷணமே செய்து முடிக்கின்றோம்

லே. இறையோன் மகள் சௌந்தரியை
இம்சை செய்யத் துடிக்கின்றேன்

கொலை. மதலையோ பாபம்
உனக்கே னம்மா கோபம்

அநுபல்லவித்தொடர்

லே. தினமிங்கனங் கெடுதி செய்கிறாள்
சிரங்கொய்திட மனங் கொண்டேனே (வ)

கொ. வ-ப்:—அம்மா! சிறு குழந்தையாச்சுதே, அது தங்களுக்கு என்ன கொடுமை செய்தது தாயே, வேண்டாம் விட்டுவிடுங்கள்.

லே. வ-ம்:—ஓஹோ! எனக்கே புத்தி புகட்ட வந்தீர்களே. எனது குணம் தெரிந்தும் மறுத்துரைக்கின்றீர்கள். இப்பொழுதே இக்காரியத்தைச் செய்ய மறுப்பீராஞல், உங்கள் குற்றங்களைக் கொண்டு உங்களைக் குடும்பத்துடன் தொலைத்து விடுவேன்தெரியுமா! என்ன சொல்லுகின்றீர்கள்.

[கொலைஞர்கள் வாயை மூடிக்கொண்டு]

கொ. வ-ம்:—அப்படியே, தங்கள் உத்திரவுப்படி ஆகட்டும்.

[ஞானசௌந்தரி அயர்ந்து நித்திரைசெய்கின்ருள். கொலைஞர்கள் மஞ்சத்துடன் தூக்கிச் செல்லுகிருர்கள்.]

சீன்-3. எகிப்து தேசம்.

பாத்திரங்கள்-சிமியோன் தர்ப்பார்-மந்திரி, பிலேந்திரன் ஞானம், கொலைஞர்கள் முதலியோர்கள்,

விருத்தம்-மோகனம்

ஆழிசூழ் அவனியெல்லாம் அன்புடன் படைத்தநாதா
வேள்விவாழ் வேந்தரெல்லாம் விதிபென விட்டாய்போற்றி
வாழுமென் ஜனங்களோடு விதைத்ததம் பயிர்களெல்லாம்
தாழ்வுரா வண்ணமுந்தன் தாளினை போற்றிபோற்றி.

(சம்போசிவகணபதி என்ற மெட்டு)

பல்லவி

தேவாயேசுநாதனே எந்தனைக்
காக்கவாவா சுதானபோதனே வ வ (தே)

அநுபல்லவி

தேவா தேவர்கள்பணி கர்த்தா யெந்தனைக்காருமே
அர்த்தா இதுததியே கர்த்தா கார்த்திடவாராய்(தே)

சரணம்

யேசுநாதா இனியமலர்ப் பாதா
எந்தனுக் கருள் தாதா
சிந்தை மகிழ வாவா
எந்தன் குருதுலங்க யேற்றும்
சங்கரலிங்கமே தங்கும் தமிழ்த்
துலங்கதாசன் குற்ருலன் பணி(தே)

பிலேந்திரன் வருகை

(திரிலோகமும் புகழும் என்ற மெட்டு)

இராகம்-ஸ்ரீராகம், தாளம்-ரூபகம்.

பரலோகயேசுநாதன் தெரிசனம்
பார்க்கக்-காணுங்-காக்ஷி-விநோதம்

ஆன்மாக்களை ரக்ஷிக்கும்ஆமன்
தன்மார்க்கச்-சிலுவையிலே
நன்மார்க்கமா யறையுண்டவன்
தாசன்-தமிழ்க்-கருள்-தங்கம்
என்குரு சங்கரலிங்கம் (பர)

பிலே:—பிதா! வந்தனம் செய்கின்றேன்.

சிமி:—கண்மணி! உன்னைக் கர்த்தர் காப்பாராக.

பிலே:—தந்தாய்! ஏதோ இன்று தங்களிடத்தில் எனது மனோஅபிப்பிருயத்தைத் தெரிவித்துத் தங்களுடைய உத்திரவைப் பெற்றுக்கொண்டு போகலாமென் றெண்ணியே இங்கு வந்திருக்கின்றேன்.

சிமி:—குழந்தாய்! என்ன இருந்தபோதிலும் கள்ள மில்லாமல் புகல்வாய்.

பிலேந்திரன் பாட்டு-தர்க்கம்

(கானகத்தில் கண்ட என்றமெட்டு)

பிலே. கானில் வேட்டையாடிக் களித்துவருகுவேன்
விடைகொடும் தந்தையரே!

சிமி. வேட்டையாடத்தருணம் இதுவல்ல நீயேக
வேண்டா மெந்தன்சேயா!

பிலே. ஏனென்னைத் தடுக்கின்றீர் என்னைப்பெற்ற தந்தாய்!
எப்படிப் பயிலுவது

சிமி. வீட்டில்பழகியே காட்டிற்கேகவேண்டும்
கண்மணி, என்சேயா!

சிமி:—குழந்தாய்! இச்சமயத்தில் நீ வனஞ் செல்வது கூடவே கூடாது; இங்குதான் இருந்து இராஜர்களுக்கு வேண்டிய வித்தைகளை நன்றாய் பயிற்சி செய்து வருவாயாக.

பிலே:—பிதா! இவ்விடத்திலேயே பயிர்ச்சிசெய்வது எனக்கு இஷ்டமில்லை, காட்டிற்குச் சென்று கொடிய மிருகங்களை நேரில்

பார்த்து வதை செய்யவேண்டுமென்று ஆவல் மிகுதியாய் இருக்கின்றது; என்மீது கிருபைகூர்ந்து விடை யளிக்கவேண்டும்.

சிமி:—நல்லது; உன்னிஷ்டம்போல் உனக்கு உதவிக்கு வேண்டியவர்களை அழைத்துக்கொண்டு காட்டிற்குச் சென்று வேட்டையாடி பொழுது சாயுமுன் சீக்கிரம் வந்துவிடு.

பிலே:—நல்லது; அதி சீக்கிரம் வந்து சேருகின்றேன்.

[போகின்றான்.]

கானகம்

[ஞானசௌந்தரியை, கொலைஞர்கள் மஞ்சத்துடன் தூக்கிக்கொண்டு வருகிறார்கள்.]

1-வது கொலைஞன்

டே! அண்ணே! என்னடா ஈது மவராணி அம்மா சொன்னாங்கெண்ணு நமது ராஜா மவளை தூக்கிக்கினு வந்துட்டோம்; ஐயோ பாவம், பார்க்கும் போதே பதைக்குதடா! நான் கொல்ல மாட்டேண்டா அண்ணே! நீதான் புள்ளைகுட்டி இல்லாதவன். அந்தப் பாவத்தே நீதா ஏத்துக்கொடா.

[ஞானத்தை உற்றுப் பார்க்கின்றான்.]

2-வது கொலைஞன்

அடே ஜோக்கே! என்னடா இப்படிச் சொல்றே. நீயும் கூட இந்து இந்த வேலைக்கி சம்மதிச்சிக்கினு வந்தாயே, இப்போ ஜோக்பண்றயா போடா போ, ராணி அம்மா இனாங் கொடுத்தா மட்டும் பங்குக்கு வருறயா?

1-வது கொலைஞன்

அடே அப்பா! பங்குவாணா ஒண்ணும்வாணா (உஸ், சும்மா இருடா அந்தப் பொண்ணு முழுச்சுக்கிச்சுடா. அங்கே போகாதே, இங்கேயே நில்லுடா.)

[ஞானம் மஞ்சத்தைவிட் டெழுந்து பயத்துடனே]

ஆஹா! என்ன ஆச்சர்யம், பெரிய இருண்ட வனமாக வல்லவோ இருக்கிறது. நான் நமது அரண்மனையில் எனது பள்ளியறையில் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தேனே. இங்கு எப்படி வந்தேன். எனது கண்ணுக்கு இவ்விதம் தோற்றுகிறதா? அல்லது, என்னை யாராவது தூக்கிக்கொண்டு வந்து விட்டார்களா? (நாற்புறமும் சுற்றிப் பார்க்கிறாள்) கொலையாளி நிற்பதைக் கண்டு ஆ, இவர்கள் யார்? என் கையில் வாளுடன் நிற்

கின்றார்கள். ஐயோ என்ன செய்வேன்; மாரித்தாயே, தேவ தேவனே, இச்சமயத்தில் என்னை ரக்ஷிக்க வேண்டும். நீதான் துணை. பயமாய் இருக்கின்றதே.

கொ:—அம்மா! ஏன் பயப்படுகிறீர்கள், நாங்கள்தான் தங்களை இங்கே தூக்கிக்கினு வந்தோம்.

ஞா:—அப்பா! நீங்களேன் கரத்தில் ஆயுதம்வைத்து நிற்கின்றீர்கள்; மேலும், உங்களைக் கண்டவுடன் எனக்குப் பயமாகின்றதே, தங்கள் புதல்வியைப் போலுள்ள நான் தங்களுக்கு,

பாட்டு

(நானென் செய்வேன் என்றமெட்டு)

என்னாலென்ன கெடுதி நேர்ந்தது
சொன்னாலதை தெரிய நேருமே
முன்னால் செய்த வினையு மூண்டதா
ஆ ஆ ஆ அப்பா (என்)

கொலைஞர்கள்-பாட்டு

(ஷை மெட்டு)

சொன்னால் பழி நேரு மம்மணி
முன்னா னின்னல் செய்த பெண்மணி
இந்நாள் தொழில் செய்யப் புகன்றார்
ஆ ஆ ஆ அம்மா (சொ)

கொ. வ-ம்:—அம்மா! தங்க சின்னம்மாளாகிய எங்க மவராணியார் உத்திரவுப்படி கொண்டுவந்தோம். உங்க கழுத்தே வெட்டணுமெண்ணு சொண்ணாங்க.

ஞா:—ஆ! எனது சிற்றன்னையா? ஆ! தெய்வமே! என்னை இக்கெதிக்காளாக்கலாமா? அடிபாவி உனக்கு யான் என்ன கொடுமை செய்தேன். என்னைப் பலவித துன்பம் செய்ததுமன்றி எனது உயிருக்கே உலை வைத்தாயே. இயேசுநாதா! நீதான் துணை. ஒரு குற்றமும் செய்யாத என்னை இக் கானத்தில் கொண்டுபோய் கொலை செய்துவிடும்படி கட்டளையிட்டனளே, ஐயோ! ஜெக ரக்ஷகா, எனக்கு இச்சமயத்தில் இங்கு,

(சுடலையிது பிணம்வேகுது என்றமெட்டு)

உன்னைவிடத் துணைவேறில்லை
அன்னையில்லாப் பிள்ளை தொல்லை
சொன்னேன் என்னைக் கார்ப்பாயேசு
நாதா உனதருளோ (உன்)

ஞா. வ-ம்:—ஆ! இயேசுநாதா; என் தந்தை வேட்டைக்குச் செல்லும் சமயம் என்னை எனது சிற்றன்னையிடம் எவ்வளவோ சொல்லி அடைக்கலம் செய்து போனாரே, அப்படி இருந்தும் தற்சமயம் என்

பாட்டு

(ஷை மெட்டு)

தந்தை யில்லா இந்த நேரம்
சிந்தை நோகச் செய்த கோரம்
வந்தேன் வன மதில் சேர
தொழுதேன் பாத முனையே (உன்)

ஞா. வ-ம்:—ஆ! அண்ணமாரே! இயேசு நாதன் சாக்ஷியாக என் மனமறிய ஒரு குற்றமும் எனது சிற்றன்னைக்குச் செய்யவில்லையே. நீங்கள் என்மீது கிருபைவைத்து உங்கள் மகள்போல் நினைத்து என்னை ஒன்றுஞ் செய்யாமல் இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. காப்பாற்றுங்கள்; சர்வேசுவரன் உங்களுக்கு எக்காலத்தும் நன்மை செய்வார்; அதன் பிறகு உங்களிஷ்டம். யான் என்ன செய்யப் போகின்றேன்.

1-வது கொலைஞன்

தாயே! உங்களைப் பார்க்கும்போதே எங்களுக்குப் பரிதாபமாகத்தான் இருக்கிறது; என்ன செய்கிறது. நாங்க ராணி அம்மாக்கு உங்களை கொலைபண்ணிட்டதாக ரத்தங் கொண்டு வரணுமெண்ணு சொல்லி இருக்காங்க, உங்க கழுத்தே வெட்டாதே கைகளை மட்டும் வெட்டிக்கிட்டுப் போகிறோம். ஏண்டா அண்ணே! அப்படிச் செஞ்சா என்னடா? பாவமா இருக்குடா.

2-வது கொலைஞன்

ஆமாண்டா தம்பி! எனக்கும் பாவமாய்த்தாண்டா இருக்குடா, உம், ஆகட்டுண்டா. [ஜாடை செய்கின்றான்.]

[கொலைஞர்கள் ஞானசௌந்தரியின் கரங்களை வெட்டிக்கொண்டு போகின்றார்கள். ஞானசௌந்தரி மூர்ச்சையாகிறாள்.]

கானகம் - பிலேந்திரன் வேட்டைக்கு வருதல்

(முருகன் திருமால்மருகன் என்ற மெட்டு.)

இராகம்-அடாணா, தாளம்-ரூபகம்.

பல்லவி

வருவீர் வேட்டையாடி யின்புறுவீர்
இந்த மாவனந்தனிலே தீவிரமாகவே (வ)

அநுபல்லவி

சிங்கம்புலியானை கரடிநாய்
சீற்றத்துடனதி கோபமாய்
ஆற்றத்தொடு நமைநாடுது (வரு)

சரணம்

பலஜாதி விலங்கினம் துலங்குதேயிங்கனம்
பார்த்திரா வேடுவரே யாளி செந்நாய் குள்ள
நரியுமே ஓடுது கோஷ்டிகளே வாராய்
கோதான தம்பட்டப் பறையையடியுங்கள்
ஆதானமென் றம்பை அன்புடன் பூட்டுங்கள்
தாதாவெனக்கத்தி தலைகண்டு வெட்டுங்கள்
தங்கித்திரி அக்காட்டினில் பங்கப்படுத்தடித்தோட்டிட (வ)

பிலே. வ-ம்:—வேடுவர்களே! நீங்கள் யாவரும் நாலாபக்கங்களிலும் சென்று மிருகங்களை எல்லாம் கலைத்து ஒரு புறமாய்ச் சேர்த்து நானிருக்கும் இடத்திற்கு வரும்படிசெய்யுங்கள்; நான் அவைகளை வதைசெய்கிறேன்; சீக்கிரஞ் சென்றுவாருங்கள்.

[ஞானசௌந்தரி மூர்ச்சை தெளிந்து]

ஞா. வ-ம்:—ஆ! அய்யோ அம்மா, நான் யாருக்கு என்ன துன்பம் விளைத்தேன், ஆ! கரங்கள் நோகின்றதே தெய்வமே.

ஞானசௌந்தரி-பாட்டு

(பச்சைமாமலைபோல் என்ற மெட்டு)

பல்லவி

அய்யோயென்-கரங்கள்-நோக
மெய்பதறியே-சாக-வினையிதுவோ (அ)

அநுபல்லவி

தையலாள்-செய்த-குற்றம்
வையகமறி-யாதோ-வனந்தனில் (அ)

ஞானசௌந்தரி-வசனம்

ஆ அன்னைமரித் தாயே! உன்னையே நம்பினேன். இக்கானகத்தில் கரமிழந்து அவஸ்தைப் படுமென்னை நினது பாதாரவிந்தையில் சேர்த்து ரக்ஷித்தருள்வது உனது கடமையன்றோ. ஆ! ஐயோ கரங்கள் நோகின்றதே, ஹே! ஜெகத்ரக்ஷகா! உனக்கு யான் என்ன குற்றமிழைத்தேனோ தெரியவில்லையே.

[ஞானசௌந்தரி மறுபடியும் சோர்வடைந்து விழுகின்றாள் பிலேந்திரன் வருகின்றான்.]

பிலே. வ-ம்:—ஹே வேடுவர்காள்! இதென்ன விந்தையாய் இருக்கின்றதே கவனியுங்கள்.

[எல்லோரும் உற்றுக்கேட்கின்றார்கள்]

ஞானசௌந்தரி-பாட்டு

(ஷை மெட்டு)

துயிலுறும்-வேளை-தன்னில்
தூக்கியே-கொலைஞர்-முன்னில் (து)

ஞா. வ-ம்:—ஆ கர்த்தனே! கடவுளே கரங்கள் நோவு பொறுக்க முடியவில்லையே, இரு கரங்களையும் வெட்டிவிட்டார்களே, ஆ அப்பா, அம்மா என்ன செய்வேன். இக்கானில் நான்,

(ஷை மெட்டு)

யாரிடம்-சொல்-வேன்-நாதா
நாரி-நான்-மதலை-பா-தா-ஏசுநாதா (யா)

தாரணியி-லன்னை-யில்லா
தந்தையார்கானில்-சென்றார் (அப்)

பிலே. வ-ம்:—வேடுவர்காள்! இதோ சமீபத்தில் தான் கேட்கின்றது போய்ப் பார்ப்போம் வாருங்கள்.

[ஞானசௌந்தரியைப் பார்த்து]

பிலேந்திரன்-விருத்தம்

(ஸ்ரீராகம்)

சூரியகாந்திபோல முகமுள்ள கன்னிகையே
நாரியே செய்ததுயார் நற்கர மிரண்டைவெட்டி
பாரில்யார் தான்சகிப்பார் பாவிகள் செய்தவேலை
கூறிடு க்ஷணமிவரை கொப்பென வதைசெய் வேனே.

பாட்டு

(இப்படிப் புலம்புவதுமேன் என்ற மெட்டு)

பல்லவி

சாதகமாகச் செப்புவாய்-அம்மா
பாதகமிழைத்து உன்னைக் கானில்துன்பஞ்செய்தவரை (சா)

அநுபல்லவி

ஓண்டிக் குரலுடனே
ஓலமிட் டழுவ தேனோ
சண்டித்தன மான வேலை-செய்த
சண்டாள மூடர்களை உண்மையுடனறிய (சா)

பிலே வ-ம்:—ஐயோ! இதென்ன கொடுஞ்செயல், ஆ என்ன அநியாயம். இப்பெண்ணினுடைய இரண்டு கரங்களையும் வெட்டி இரத்த வெள்ளம் பெருகும்படி செய்து யாருமில்லாக் கானகத்தில் போட்டுவிட்டுப் போய்விட்டனரே. இச் சிறுவயதில் இச் சிறுமி என்ன குற்றம் செய்திருப்பாள்; நல்லது, சமீபத்தில் சென்று வினவி இவளுக்கு வேண்டிய உதவி புரியலாம். வேடுவர்காள் கொஞ்சம் ஜலம் கொண்டு வாருங்கள் சீக்கிரம்.

[ஞானசௌந்தரிக்கு உதவிபுரிந்து மூர்ச்சை தெளிவிக்கின்றான்]

பாட்டு-தர்க்கம்

(எக்குலத்திலே யுதித்தாய் என்ற மெட்டு)

பிலே. கரங்க ளிரண் டில்லாமல்
கலங்குறு யுந்தன்நகர்-யாது

ஞா. சின்னஞ் சிறுவயது எனக்
கின்னும் ஊர்தெரியாது-அன்பா

பிலே. பெற்றதாய் தந்தை நாமம்
உற்றவுன் பெயரென்ன-கோதே

ஞா. தாயில்லாப் பிள்ளை ஞான
சொந்தரி யென்றுரைப்பார்-அன்பா

பிலே. தந்தைபேர் தெரியா தோ
தனித்திங்கு வந்ததேனோ-மாதே

ஞா. மாற்றாந்தாய் செய்த கோரம்
ஆற்றாத் துயரானதே-நேரம்

ஞா. வ-ம்:—ஐயன்மீர்! எனது ஜென்மாந்தர வினைப்பயனால் இக்கெதிக்காளாகினேன். இந்தக் கொடுங்கானகத்தில் திக்கில்லாதவளாக உயிர்போகும் தருவாயில் கர்த்தனைப்போல் என்னுயிரை நிலை நிறுத்தினீர்கள். தற்சமயம் எனக்கு மயக்கம்மேலிடுவதால் எனது வரலாற்றைக்கூறச் சக்தியற்றவளாக இருக்கின்றேன். ஆனதினால் தயவுசெய்து என்னை மன்னியுங்கள்.

பிலேந்திரன்-விருத்தம்

(மோகனம்)

ஒன்றுக்கு மஞ்சவேண்டாம் உனக்குயான் துணையாய் நின்றேன்
கன்றுக்குப் பசுவைப்போல கனமுடன் கழிப்புமூட்ட
இன்றைக்கு வந்தேன்கானில் இருந்துமே வேட்டையாட
நன்றென்று யேசுநாதன் நல்முறைப்படியே காப்பார்.

பிலே. வ-ம்:—பெண்ணே! நீவருந்தாதே எல்லோருக்கும் பொதுவாகவும், நன்மை-தீமை யறியவும், துஷ்டரை சிஷ்டபரிபாலனஞ் செய்யவும் இவ்வுலகத்தில் கர்த்தர் ஒருவர் இருக்கின்றார்; தற் சமயம் உன்னை எனது நாட்டிற்கு அழைத்துச்சென்று உனக்கு வேண்டிய உதவிபுரிந்து வரலாமென எண்ணுகின்றேன். ஆனதினால், உன்னுடைய மறுமொழியை எதிர் பார்க்கின்றேன்.

ஞா. வ-ம்:—தங்கள் சித்தம் எனது பாக்கியம்.

[பிலேந்திரன், ஞானசௌந்தரியை தன்னுடைய ராஜியத்திற்கு அழைத்துப் போகின்றான்.]

சீன்-4. இடம்-உரோமாபுரி தனி இடம்.

பாத்திரங்கள்-லேனாள், தருமர், சேவகன்,

[வேட்டைக்குச்சென்ற தருமராஜன் வருகிறார்]

லே. வ-ம்:—பிராணேசா! வந்தனம் செய்கின்றேன்.

தரு:—கண்மணி! லேனா குழந்தை ஞானம் சௌக்கியம் தானே? குழந்தையை அழைத்துக் கொண்டு வா.

லே:—நாதா! ஏன் ஒருவித முகவாட்டமுற் றிருக்கின்றீர்கள்? வேட்டையில் அதிகக் கஷ்டம்போ லிருக்கிறது. எழுந்து வாருங்கள்; தாகசாந்தி செய்து கொள்ளுங்கள்.

தரு:—பெண்ணே! நான் கேட்பதொன்று நீ சொல்வதொன்று குழந்தை வரவில்லையே? பார்க்கவேண்டும் அழைத்து வா சீக்கிரம்.

லே:—இங்கேதானே இருந்தாள், எங்கு சென்றாள். அடி ஞானம், அம்மா ஞானம் (என்று குழந்தையைக் கூப்பிடுகின்றாள்.)

தருமர்-தரு

(பவளக்கொடியின் மீதிலாசை என்ற மெட்டு)

அருமை ஞான சௌந்தரி
அவளெங்கே போனாள் சொல்லு
அவளெங்கே போனாள் சொல்லு-அந்த
உண்மை யெனக்கு விள்ளு-எந்தன் (அ)

ஆசைவிசு வாச முடைய
அருமைக் குழந்தை யெங்கே-என்
அருமைக் குழந்தை யெங்கே-நான்
பெருமை யிழந்தே னிங்கே-என் (ஆ)

தரு. வ-ம்:—லேனள்! குழந்தையைக் கண்டால் தான் என் மனம் சந்தோஷமடையும. எங்கே குழந்தை சீக்கிரஞ் சொல்.

லேனள்-தரு

(ஷ்டி மெட்டு)

சம்பங்கி எண்ணெய்யுங் கொண்டு
சடையும் பின்னல் போட்டேன்
சடையும் பின்னல் போட்டேன்-உய
ராடையு மலங் கரித்தேன்-நல்ல (சம்)

லே. வ-ம்:—நாதா! யான் செய்த வகைகளை எல்லாம் சொன்னல் தாங்களே ஆச்சர்யப் படுவீர்கள்.

லேனள்-தரு

அறுசுவை யுடனே யன்னம்
ஊட்டியுமுப சரித்தேன்-நான்
ஊட்டியு முப சரித்தேன்-தேகக்
கஷ்டத்தால் கொஞ்சம் படுத்தேன் (அ)

தருமா. வ-ம்:—இவ்வாறு உபசரித்த குழந்தையை எங்கே? சேவகா! உனக்குத் தெரிந்தால் சொல்லு.

சே:—பிரபு! இங்கேதான் விளையாடிக்கொண்டு இருந்தது. எங்கே அம்மா? நடந்ததைச் சொல்லுங்களேன். குழந்தைக்கு என்ன அன்பு என்ன மரியாதை என்ன உபசரணை எல்லாவற்றையும் சொல்லம்மா.

[லேனள் மறைவாக சேவகனுக்குச் சைகை செய்கின்ருள்]

தருமர் உடல் பதறி கோபத்துடன் லேனளைப் பார்த்து

(பக்தி கொண்டாடுவோம் என்ற மெட்டு)

பல்லவி

எங்கே மகளெங்கே நீ சொல்லுவாய் (எங்)

(மகுடம் தொகையருப்போல் படிக்கவும்)

* கூடத் தொடர்ந்து வருவேனெனக்
கூவியழுதயென தருமைமகள் (எங்)

எனைவிட்டுப் பிரியாதின்பம்
தனைத்தொடர்ந்து வருவேனென வுரைத்தமகள் (எங்)

---

* மகுடத்தைத் தொகையருப்போல் பாடவும்.

கனவிலும் பிரியாத கண்மணியான
ஞானசௌந்தரி மகள் (எங்)

தாயில்லாச் சேயென தனித்துன்னிடம்
வுரைத்து விட்டுச்சென்ற மகள் (எங்)

பெண்ணென்றுந் தங்கும் சொந்தம்
கந்தம் இன்பம் பொங்கியமகள் (எங்)

தரு. வ-ம்:—அடி! பாவி எனது அன்பிற்குரிய குழந்தை ஞான சௌந்தரியை எங்கே, என்ன செய்தாய் சீக்கிரஞ்சொல்லு.

லே. வ-ம்:—நாதா! தாங்கள் எக்காலத்திலும் என்மீது இவ்வளவு சினங்கொண்டது இல்லையே. நான் செய்த வுபகாரத்தைச் சொல்லுகின்றேன் கவனியுங்கள்.

லேனுள்-பாட்டு-தர்க்கம்

(மாப்பிள்ளை வந்துநான் என்ற மெட்டு)

தருமர்-தரு-தர்க்கம்

தருமர். உபசரணைசெய்து ஊட்டிவளர்த்தாயே
உண்மைஞான மகளெங்கடி (உப)

லே. பஞ்சணைமீது படுத்திருந்தமகள்
பாவையுமெங்கனஞ் சென்றுளோ (பஞ்)

தரு. அறியாச்சிறுமியும் அரண்மனையைவிட்டு
தெரியாமலே வெளிச்செல்வளோ (உப)

லே. பெற்றபிள்ளையினும் உற்றமடங்காக
ஊட்டிவளர்த்தது மில்லையோ (பஞ்)

லே. வ-ம்:—நாதா! குழந்தை ஞானத்திற்கு தாங்கள் போனது முதல், வேளை தவறாமல் அன்னமூட்டி ஸ்நானம் செய்வித்து, மெல்லிய பஞ்சணையில் படுக்கவைத்தேன். நேற்று இரவும் இது போலவேசெய்து, குழந்தையின் சமீபத்திலிருந்தே, தூங்கும் படிசெய்துவிட்டு, அதன்பிறகு நான் போஜனமருந்தி நித்திரை செய்தேன். காலையிலெழுந்து குழந்தையைப் பார்த்தால் காண வில்லை. நானும் அதேதகவலையாக இருக்கும்சமயம் தாங்களும் வந்து விட்டீர்கள். நான், வேறொன்றும் அறியேன் பிரபு.

தரு. வ-ம்:—அடி! பாதகி என் குழந்தைக்கு ஏதோ பல இன்னல்கள் விளைத்திருக்கின்றனை. இல்லாவிடில், குழந்தை வீட்டைவிட்டு எங்கேபோகும் சீக்கிரம் சொல். என்கோபத்திற் காளாகாதே உம்; ஆகட்டும்.

தருமர்-தரு

(அடடா அடடா எமனே என்ற மெட்டு)

பல்லவி

எங்கேயெங்கே மகளெங்கே
என்னருமைஞான மகளெங்கே (எங்)

அநுபல்லவி

காட்டிலிருக்கும்போதே கன்னிஞானத்தின்மீதே
கவலையெனக்குமெத்த ஆவலாயிங்கோடிவந்தேன் (எங்)

போடி யெனைக்குறித்து நாடி
புத்தி யில்லா மூடி
யெனக் குரை வாயாடி

குழந்தைக்கு நீயேதோ கொடுமைசெய்திருக்கின்றாய்
குற்றம் வெளிப்படாமல் முற்றும் புகலவந்தாய் (எங்)

லேனாள்-பாட்டு

(மற்றுப்பெற்றேன என்ற மெட்டில் முடுக்கில் பாடவும்)

நாயகாநான்சொன்ன துண்மையே
நம்புவீர்யெனை நம்புவீர்
தாயகாபிதையார் விலக்குவர்
தையலாள்மோசம் புரிவளோ (நா)

வாயதாடினும் வையகத்தினில்
தையலாள் துணையில்லையே
தர்மமேஜெபமென்று நம்பினேன்
தப்பிதமொன்றும் புரிகிலேன் (நா)

தருமர்-தரு

(ஷை மெட்டு)

கொண்டபேதையே குழந்தைக் கன்புநீ
செய்ததுசுத்தப் பொய்யடி
விண்டவார்த்தைகள் எவருக்கெட்டினும்
உருகுவாருன தன்பிற்கு (கொ)

லே:—நாதா! தாங்கள் என்மேல் இவ்விதக் கோபங்கொள்ளலாகாது. நடந்த விஷயம் சொன்னதுதான் உண்மை. எப்படி விட்டாலும் சம்மதம், நான் என்ன செய்யப்போகிறேன்.

தரு:—ஐயோ! அன்னை மேரித்தாயே, உலக ரக்ஷகரே, தேவ தேவனே, காருண்ய கர்த்தனே, குழந்தை நான் வேட்டைக் கேகும் சமயம் நானும் வருவேன் என்று ஒரே பிடிவாதம் செய்ததே. இச்சண்டாளி நானில்லாத வேளை எனதருமைக் குழந்தையை என்ன துன்பம் செய்தாளோ அறியேன். ஆ அருமைக் கண்மணி உன் தலைவிதி இப்படி யாகுமென்று நினைக்கவில்லையே ஆ ஜீவகர்த்தனே! குழந்தையை நீதான் காத்து ரக்ஷித்தல் வேண்டும்.

சீன்—4. **இடம்:—எகிப்தேசம்.**

பாத்திரங்கள், மதலை, சிமியோன், பிலேந்திரன், பாதிரி, ஞானம், முதலியோர்கள்

மத:—நாதா! வந்தனம்.

சிமி:—பிராணசகி! குழந்தை பிலேந்திரனின் விருப்பம் இன்னதென்று கண்டறியும்படி சொன்னேனே தெரிந்தாயா? மேலும் எந்த ராஜகுமாரியைக் கல்யாணம் செயதுகொள்ள இச்சையுடையவனாக இருக்கின்றான், தெரிந்து சொல்வாயாக.

மத:—நாதா! நான் இன்னும் அவனைக் கேட்கவில்லை; அவனை இங்கு வரவழைத்து நேரில் கேட்டால் பதில் சொல்லுகின்றான்.

[பிலேந்திரன் வருகின்றான்]

பிலே. வ-ம்:—மாதா பிதாக்களே! அடியேன் வணங்குகிறேன். என்னை அழைத்த காரணம் யாது?

மதலை:—கண்மணி! உனக்கே வயது நிறைந்திருக்கிறது. மேலும், நாங்களோ விருத்தாப்பியர்கள், உனது விவாகத்தைப்பற்றி வினவவே இங்கு வரவழைத்தேன். என்ன தெரிவிக்கின்றாய்.

பிலே-பாட்டு

(கனகசபாபதி என்ற மெட்டு)

பல்லவி

கானில்கண் டெடுத்து வந்த
ஞான சௌந் தரியைக்
கல்யாணஞ் செய்து வையுமே (கா)

அநுபல்லவி

வேட்டைக்குச் சென்றிருந்தேன்
வெற்றி கொண்டும் வந்தேன்
காட்டி லிருந்தோர் கனி

வீட்டிற்குக் கொண்டு வந்த
கன்னியை மணம் முடிப்பேன் (கா)

பிலே. வ-ம்:—அம்மா! விளக்கிருக்கத் தீத் தேடுவானேன். நான் கானகத்திலிருந்து கொண்டுவந்த ஞானசௌந்தரியைத் தான் விவாகம் செய்துகொள்ள நிச்சயித்திருக்கின்றேன். இது விஷயம் பிதாவிற்குத் தெரிவியுங்கள்.

மதலே:—குழந்தாய்! நீ நினைத்திருக்கும் எண்ணத்தை விட்டுவிடு. அவள் இளமைப் பருவத்திலேயே குற்றம் செய்ததற்கு இரண்டு கரங்களையும் துணித்து கானிலோட்டி விட்டார்கள். அவளை விவாகம் செய்துகொண்டால் ஊரார் நம்மை ஏளனம் செய்யமாட்டார்களா? நன்றாய் யோசித்துப்பார். மேலும் இரண்டு கரங்களு மில்லாதவள். உனக்குத் தெரியாததல்ல. கரமில்லாதவளைக் கல்யாணம் செய்தால் என்ன சுகம் கிடைக்கும்?

பிலே-பாட்டு-தர்க்கம்

(ஷாதுமான் என்ற மெட்டு)

மதலே-தரு

நியாயமா கரமில்லாத
கன்னியின் விவாகமா
கருதாதே விருதாவினில்
இருகா துன மனதாகினில் (நி)

பிலே-தரு

ஆதரி கரமில்லாதவளை நீ பராமரி
கல்யாணம் செய் தன்னைக்
கண்குளிரக் காண்பீரே (ஆ)

பிலே. வ-ம்:—அம்மா! அப்பெண்மணியின் சிற்றன்னை செய்த கொடுமையே தவிற வேறில்லை. தாங்கள் வேறுவிதமாகவும் எண்ணக்கூடாது. நான் அவளைத் தவிற வேறு யாரையும் விவாகம் செய்துகொள்ளமாட்டேன். இது நிச்சயம்.

மதலே:—கண்மணி! குழந்தாய் நீ துயருறாதே. இது விஷயத்தை உனது பிதாவுக்குத் தெரிவித்து, உனது விருப்பம்போல் உனது எண்ணத்தைப் பூர்த்திசெய்கின்றேன்; கவலையுறாதே.

பிலே:—அப்படியே; மெத்த சந்தோஷம்.

[தேவமாதா கோவிலில் விவாக முகூர்த்தம்]

பாதிரி வசனம்

அன்புள்ளவர்களே! தூய்மையான தேவ மாதாவாகிய திருச்சபையின்கண் இதோ நிற்கும் மணவாளனையும், மணவாட்டியையும் உண்மை விவாகத்தால் இணைக்கும்படி நாமிங்கே ஒருங்குகூடி யிருக்கின்றோம். விவாக மனிதன் பரிசுத்த நிலைமையிலிருந்த காலத்தில் கர்த்தனால் ஸ்தாபிக்கப்பட்டது. இது இயேசுநாதருக்கும் அவர் திருச்சபைக்குமுள்ள சம்பந்தத்தை வெளிப்படுத்துகின்றது. விவாகம் செய்யும் நோக்கம் இன்னதென நன்றாய்க் கவனித்து மானிடர்கள் பயபக்தியுடனும், பரிசுத்த நிலைமையுடனும் நிற்கவேண்டும். (மணவாளனைப் பார்த்து) அன்பும் பிரியமுள்ள பிலேந்திரனே! கர்த்தனின் திருச்சபை ஒழுங்கின்படியே உன் முன்பாக இருக்கிற ஞானசௌந்தரியை உன் சொந்த மனைவியாக இன்பத்திலும், துன்பத்திலும் இணைபிரியாமல் ஏற்றுக்கொள்ளுகிறாயா?

பிலே:—ஆமென். (தலை வணங்குகின்றான்)

பா. வ-ம்:—பிரியமுள்ள ஞானசௌந்தரியே! கர்த்தனின் திருச்சபை ஒழுங்கின்படியே உனது எதிரிலிருக்கிற பிலேந்திரனை உனது சொந்த மணவாளனாகச் சம்மதித்து ஏற்றுக்கொள்ளுகின்றாயா?

ஞா. (தலைவணங்குகிறாள்)

[பாதிரி பிலேந்திரன்கரத்தில் மாலைகொடுக்க ஞானசௌந்தரிக்கு மாலைசூட்டுகிறான்]

பா. வ-ம்:—நேசமானவர்களே! கர்த்தன் முன்னிலையிலும், மனிதனின் முன்னிலையிலும், இத் திருச்சபை முன்னிலையிலும், சாக்ஷியான இவர்களின் முன்னிலையிலும் இரண்டுபேரும் சம்மதித்து மாங்கல்யம் தரித்து இன்றுமுதல் புருஷன் மனைவியாக ஏற்றுக்கொண்டபடியால் உண்மையான தேவன் இவர்களைப் பாது காத்து ரக்ஷிப்பாராக?

[மணியடித்துப் பூஜையாகிறது எல்லோரும் தேவனை வணங்கிப் போகின்றார்கள்]

சிமியோன் தனி இடம்

சே. வ-ம்:—பிரபு! வந்தனம்.

சிமி. வ-ம்:—நீங்கள் யார்? என்ன விசேஷம்?

சே. வ-ம்:—தருமராஜா ஒருகடிதம் கொடுத்தனுப்பி இருக்கின்றார்.

சிமி. வ-ம்:—(கடிதத்தைப் பிரித்துப்பார்த்து) சேவகா! நீசென்று பிலேந்திரனை யழைத்து வா?

சே. வ-ம்:—அப்படியே.

பிலே. வ-ம்:—பிதா! வந்தனம் செய்கிறேன்.

சிமி. வ-ம்:—குழந்தாய்! இதோ இந்த நிருபத்தை வாசி தருமராஜா விடமிருந்து வந்திருக்கிறது.

பிலே:—(கடிதத்தைப் பிரித்துப் பார்த்து) எகிப்து தேசத்து வேந்தனாகிய சிமியோன் மகாராஜா அவர்களுக்கு எழுதிய நிருபம் இப்பொழுது எனது ராஜ்ஜியத்தின் மீது தர்க்கிஸ்தானத்து அரசன் தனது சேனைகளுடன் படை எடுத்து வந்திருப்பதால் இச்சமயம் எனக்கு உதவிபுரிய தங்கள் குமாரனாகிய பிலேந்திர இளவரசனை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு,

தருமராஜா.

பிலே:—பிதா! தங்கள் உத்தேச மெப்படி?

சிமி:—கண்மணி! பிலேந்திரா! தருமராஜா மிகவும் நல்லவர். இச்சமயத்தில் நாம் உதவி புரியவேண்டிய தவசியம்; ஆதலால், சீக்கிரம் நமது சேனைகளில் சொற்பம் துணையாக் கொண்டு போய் தருமராஜாவிற்கு வெற்றியுண்டாக்கி சீக்கிரம் திரும்புவாய். புறப்படு ஜல்தி.

பிலே:—தந்தாய்! தங்கள் உத்திரவுப்படியே. [போகின்றான்]

[ஞானசௌந்தரி அந்தப்புரம்]

பாட்டு

இராகம்-சாவேரி, தாளம்-ஆதி.

பல்லவி

* அடித்தாலும் வைதாலும்-அவரே துணையல்லாமல்
ஆர் துணை யடிமானே (அடி)

அநுபல்லவி

மடிந்தாலு மவருடன் வாய்மத மிஞ்சலாமோ
வனத்தின் கீழிருந்து மழையிடிக் கஞ்சலாமோ (அ)

சரணம்

குற்றங் குறைகள் கண்டால் கொண்டவர் பொறுப்பாரோ
குணமாக நாம் நடந்தால் கோபித்து வெறுப்பாரோ
இன்றைக்குச் சொல்வோரெல்லாம் என்கடன் தீர்ப்பாரோ
இழவுக்கு வந்தோரெல்லாம் தாலி யறுப்பாரோ (அடி)

ஞா:—பிராணநாதா! வந்தனம் அமருங்கள்.

---

* இப்பாட்டு வேதநாயகம் பிள்ளை கீர்த்தனை.

பிலே:—பிராணசகி! ஓர் விசேஷம் அதற்காக உன்னிடம் விடை பெற்றுச் செல்லவே வந்திருக்கின்றேன்.

ஞா:—நாதா! தயைகூர்ந்து சொல்லுங்கள்.

பிலேந்திரன் பாட்டு

(பக்ஷமிருக்கவேண்டும் மன்னரே என்றமெட்டு)

போருக்குப் போய்வருவேன் சகிநானே
இந்தப்-பாருக்குள் விடைகொடடி என் மானே

விரைந்துமே வருவேன்—கரைந்துமே உய்வாய்
தருவது மெனக்கு நீ தருவாயே
தயை செய்து மகிழ்ந்து விடை ஈவாயே (போ)

ஞா. இப்போது தாம் செல்ல நீதி யல்ல
எனக்குற்ற கொர்ப்பமது பாதியல்லோ
தையலைவிட்டுத் தனித்துமே செல்ல
தயங்குதே என்மனது இவ்வேளை-மெத்த
மயங்குகிறேன் கொர்ப்பப் பிணி தன்னாலே (இப்)

பாட்டு-தர்க்கம்

(விளக்கிடு மீனாக்ஷி என்றமெட்டு)

பல்லவி

பிலே. சென்றுவரவிடை ஈவாய்
சேயிழைபெண்ணே-இது
நன்றன்றுநீ தடுப்பதாகாது கண்ணே

அநுபல்லவி

ஞா. என்னைவிட் டேகவோ
இன்பம் பெருகவோ
சென்று போர் வென்று
நீர் சீக்கிரம் வருவீர்

சரணம்

பிலே. ஜெகத்தினில் அதி விரை
வுடனது வருகுவேன் (செ)

ஞான:—நாதா! தற்சமயம் நான் பூர்ண கர்ப்பவதியாயிருப்பதும் தெரிந்து என்னைத் தனிமையாய்விட்டுப் போகின்றேனென்பது எனக்குப் பிடித்தமில்லை. ஆனதினால் தயைகூர்ந்து நின்றுவிடுங்கள்.

பிலே:—பெண்ணே! நீ கூறுவது உண்மையே, இருந்தபோதிலும் ஓர் அரசன் ஆபத்திற்கு நாம் உதவி செய்வது அவசியமே.

உனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யும்படிக்கு ஏற்பாடு செய்து போகின்றேன்; வருந்தாதே. சென்றுவர உத்திரவு கொடு கண்மணி!

ஞா:—நாதா! சகலமுமறிந்த தங்களுக்கு எடுத்துரைக்க இயலுமா? இச்சமயத்தில் தங்கள் உதவியே எனக்குப் பெரிதும் விரும்புகின்றேன். அதற்குமேல் தங்களிஷ்டம்.

பிலேந்திரன்-விருத்தம்

(தோடி)

சேனைத்துணைக்கென்னைவிரும்பும்நிரபராதிக்கென்னையன்றி
ஆணைதடைப்பட்டுப்போகாவிடில்போருக்குப்பயந்தேனென்றே
துணைப்பட்டமன்னரென்னைஇகழ்வாரதனால்
கணைப்பட்டசொல்வாங்கிவாழநான்சகியேன்கண்ணே.

பிலே:—பெண்ணே! ஓர் வேந்தனுக்கு ஆபத்து வந்தபோது என்னையொருபொருட்டாக எண்ணி உதவிக்கு அழைத்தால் வரமுடியாது என்று சொன்னால் என்னைப்போன்ற அரசர்கள் போருக்குப் பயந்து நின்றுவிட்டதாக எண்ணி என்னை ஏளனம் செய்வார்கள்; ஆகையால், என்னைவேண்டி இச்சமயத்தில்,

பிலேந்திரன் பாட்டு-தர்க்கம்

(தடையில்லை என்ற மெட்டு)

பல்லவி

பிலே:— வருகின்றேன் சென்று வருகின்றேன்
ஜெயக்காதலியேயிங்கு பயங்கொள்ளாதே இரு (வரு)

அநுபல்லவி

தற்போதுநிலைமைக்குத் துணையாகயானும்
வைக்கிறேன் தாதியைக் கூடவேகாணும்
நிலைகொண்டுவேலையைத் தலைகொண்டுசெய்வாளே (வரு)

ஞானம்-தரு

வருகுவீர்சென்று வருகுவீர்
ஜெயக்காதலரேசென்று தாமதஞ்செய்யாமல் (வ)

சிறியாள்கர்ப்பமதனாலே யான்சொன்னேன்
நாரியாள்தடுத்து உரைக்கவுமானேன்
நாயகரேஇன்று தன்மையுடன்சென்று (வ)

பிலே. வ-ம்:—பிராணசகி! நீஒன்றுக்கு மஞ்சாதே, உன்னைவிட்டு அரைக்ஷணமேனும் பிரியாமலிருக்கத் தோழிமார்கள் இருக்

கின்றார்கள். உனக்குவேண்டிய உதவிபுரிவார்கள் கவலையுறாதே கண்மணி! சென்றுவர உத்திரவுகொடு. சீக்கிரம், வந்துவிடுகின்றேன்.

ஞா. வ-ம்:—நாதா! யான் தங்களுக்கு எவ்வளவு எடுத்துரைத்தும் ஓரே பிடிவாதமாய்ப் போகத்தான் வேண்டுமென்று சொல்லுவதால், தங்களிஷ்டம்போல் சந்தோஷமாய்ப் போய்வாருங்கள். சீக்கிரம் வந்துவிடுங்கள்? [பிலேந்திரன் போகின்றான்.]

சீன்—5. இடம்:—போர்க்களம்.

பாத்திரங்கள்-பிலேந்திரன், தருமர்.

(தருமராஜரும், பிலேந்திரனும் கர்த்தனை வணங்குகின்றார்கள்)

விருத்தம்

(சங்கராபரணம்)

பலமுறை உலகிலுந்தன் பாதமே ஸ்தோத்தரித்து
நலமுடன் வாழ்ந்திருந்து கனமுட னரசுபெற்று
வண்மையாய்ப் பகைவர்கட்கு புறங்காட்டி ஓடிடாமல்
உண்மையாய் ஜெயமேபெற உமதருள் செய்குவீரே.

தருமராஜன்-பாட்டு

(அலைசேர் கடல்சூழ் என்ற மெட்டு)

கர்த்தாவுந்தன்-பாதம்போற்றி
கவலைதீர்போர்-வெகுஜெயமேற்றி
கனிவுடனே துதிபுரிந்தோம்
துணிவுடன்போர் ஜெயமனநினைந்தோம்

சம். வ-ப்:—ஹே! தருமராஜா, பிலேந்திரராஜா, இதோ நான் கொடுக்கும் வாளைக்கொண்டு உங்கள் சத்துருக்களைச் ஜெயிப்பீர்களாக.

[வாளைப்பெற்று போர்க்களம் சென்று ஜெயம் அடைந்து, சுல்தானை கைதுசெய்து பிலேந்திரன் திரும்பி வருகின்றான்]

பிலே:—தருமராஜா அவர்களே! யுத்தத்தில் ஜெயம் பெற்று டர்க்கிஸ்தான் அரசனைக் கைதுசெய்துள்ளேன். இனி யான் சென்று வர உத்திரவு கொடுக்க வேண்டும்.

தரு:—நல்லது! நமது அரண்மனைக்குச் சென்று சில தினங்கள் தங்கி யிருந்து போகலாம்.

பிலே:—நல்லது; அப்படியே வாருங்கள் போகலாம்.

(எகிப் தேசத்திலிருந்து சிமியோனின் வேலையாட்கள் கடிதம் கொண்டு வருதல்.)

[லேனாள் அந்தப்புரம்]

லே:—யாரடா அது? ஆசாரவாசலென் றறியாமல் இவ்வளவு வேகமாய் ஓடுவது?

தூது:—அம்மா! எகிப்தேசத்து மகாராஜாவினிட மிருந்து வருகின்றோம்.

லே:—வந்தவருக்கு வரத்தெரியாதா? ஏன் பின்னாலேயே ஓட்டமாய் ஓடி வந்தீர்கள்?

தூது:—இல்லே, அம்மா! எங்க இளேய மகாராஜாவுக்கு ரொம்ப சந்தோஷமான சமாச்சாரம் கொண்டுவந்திருக்கின்கிறோம். எங்கே அம்மா இருக்காங்கோ இடம் சொல்லுங்கம்மா, நாங்கள் போவணும்

லே:—தூதுவர்காள்! என்ன சந்தோஷகரமான விஷயம். அவருக்கு விவாகம் நடக்கப்போகின்றதா? அல்லது ராஜ்ஜிய மகுடாபிஷேகம் நடக்கப் போகின்றதா? என்ன விஷயம் சொல்லிவிட்டுப் போங்களேன்.

தூது:—அம்மா! எங்க சின்ன மகராஜாவுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதுங்க.

லே:—என்னடா! ஆச்சர்யம் ஒரு கடிதம்கூட வரவில்லேயே, எப்போது ஆயிற்று?

தூது:—சமாச்சாரம் சொல்றேன் கேளுங்கம்மா! ஒருநா, நாங்க சின்ன மவராஜா எல்லாம் காட்டிற்கு வேட்டைக்குப் போன இடத்தில் இரண்டு கையுமில்லாத ஒரு பெண்ணேக் கண்டோம். அந்த அம்மா நல்ல பெண்ணுங்க, அழகு என்னுங்க அடா, அந்த அம்மாளே வூட்டுக்குக் கூட்டிவந்து கலியாணம் பண்ணிக்கிட்டாருங்கோ இப்போ இரண்டு ஆண் குழந்தை பிறந்திருக்கிங்கோ, மவராஜாகிட்டே சொல்லணுங்க எங்கம்மா! இருக்காரு சொல்லுங்க நாங்க போகணும்.

லே:—தூதுவர்காள்! இந்த நல்விஷயத்தைக் கொண்டுவந்த உங்கட்கு என்னுலியன்ற வெகுமதி கொடுத்து விருந்து செய்தனுப்புகின்றேன். அரசரிடம்போய் வருஞ்சமயம் சீக்கிரம் திரும்பி வாருங்கள். மறந்து போகாதீர்கள். அவசியம் வந்து போகவேணும்.

தூது:—நல்லது அம்மா! தங்கள் சித்தம் எங்க பாக்கியம்.

லே:—இதோ; இப்படியே போனுல் அரசரைப் பார்க்கலாம்.

லே:—(தனிமையாக) ஆஹா! என்ன மதியீனம் அந்தச் சண்டாளக் கொலேஞர்கள் இரண்டு கரத்தைமட்டும் தரித்து நம்மிடம் அடையாளங்காட்டி அச்சண்டாளியை உயிருடனே அல்லவோ

விட்டிருக்கின்றூர்கள். இருக்கட்டும் தூதுவர்கள் வரட்டும்; அவர்களுக்குக் குடி ஊற்றி மயக்கி அவர்களிடம் இருக்கும் கடிதத்தைப் பிரித்துப்பார்த்து அதற்கு நேர் விரோதமாக எழுதி வைத்துவிடுகின்றேன். இவ்வாறு செய்யாவிடில் எனது உயிருக்கே மோசம் வரும் நல்லது தூதுவர்கள் வரட்டும்.

தனி இடம்

(பிலேந்திரன், தருமராஜா, வீற்றிருக்கின்றூர்கள்)

தூது:—பிரபு! வந்தனம் செய்கின்றோம்.

பிலே:—யார் அது? எங்கிருந்து வருகின்றீர்கள், என்ன சமாச்சாரம்

[தூதுவர்கள் கடிதத்தைக் கொடுக்கின்றூர்கள்]

பிலே:—(கடிதத்தைப் பார்த்து) தரும ராஜாவர்களே! எனக்கு இரண்டு ஆண்குழந்தைகள் ஜெனனமாயிருக்கின்றதாம் தந்தை நிரூபம் எழுதி இருக்கின்றூர். இதோ கடிதத்தைப் பாருங்கள்.

தரு:—ஆஹா! அப்படியா மிகவும் சந்தோஷம். ஏசுநாதன் கிருபை. குழந்தைகளைக் கர்த்தன் ரக்ஷிப்பாராக. இதைமுன்னிட்டு இன்று நமதரண்மனையில் ஓர் விருந்து நடத்தப்போகின்றேன். சீக்கிரம் வருவதாக எழுதி அனுப்புங்கள்.

பிலே:—நல்லது; தங்களிஷ்டம்போல் எழுதி அனுப்புகின்றேன்.

[கடிதம் எழுதுகின்றூர்]

பிலே:—தூதர்காள்! இக்கடிதத்தை எனது பிதாவிடம்சேர்த்து நாளையத்தினம் நான் வருவதாகத் தெரிவியுங்கள்.

தூது:—நல்லது; மவராஜா அப்படியே தெரிவிக்கின்றோம்.

[லேனுள் அந்தப்புறம்]

சீன்-6. இடம்-ரோமாபுரி அரண்மனை.

பாத்திரங்கள்-லேனுள், தூதர்கள், சேவகன்.

லே. வ-ம்:—என்ன இது! இவ்வளவு நேரமாகியும் வருவதாகச் சொன்ன தூதர்கள் இங்கு வராமல் சென்று விட்டார்களா?

[தூதர்கள் வருகின்றூர்கள்]

தூத:—ஏண்டா! இந்த மவராணி அம்மா என்னமோ சொன்னுர் களே, வாங்கடாப் போய்ப் பார்க்கலாம். அம்மணி! நமஸ்காரம்.

லே:—தூதர்காள்! உங்கள் அரசரைப்பார்த்தீர்களா? பதில் லிகிதம் கொடுத்தாரா?

தூத:—அம்மா! பார்த்தோம் குழந்தைகள் பிறந்ததைக் கேட்டுச் சந்தோஷப்பட்டார். பதிலும் கொடுத்தனுப்பினர்.

லே:—தூதர்காள்! மெத்த சந்தோஷம். நான் சொன்னதுபோல் எனது உற்சாகத்தைக்காட்ட உங்களுக்கு விருந்து செய்ய சேகரித்தவைகளைப் புகல்கின்றேன் கவனியுங்கள்.

பாட்டு-நொண்டிச்சிந்து

பட்டைச்சரக்கு வேண்டுமா-நல்ல
 பத்தாயிபீர்புட்டி உஸ்கிவேண்டுமா
பட்டையரக்கு வேண்டுமா-நல்ல
 கட்டையைக்கடைதேற்ற கள்ளுவேண்டுமா
கொழும்பு அரக்கு வேண்டுமா-அந்த
 இங்கிலீஷ் ஒயின்பிராந்தி ஜின்வேண்டுமா
கஞ்சா அபினி வேண்டுமா-மயக்கஞ்செய்
 கடவஞ்சிப்பூரணுதி பீடிவேண்டுமா
பென்சர்சுருட்டு வேண்டுமா-இன்னம்
 யானைமார்க்குசிகரட்டு குடிவேண்டுமா
என்னென்ன வேண்டும் சொல்வீர்-உங்க
 ளிஷ்டம்போல் எடுத்துமே குடித்துக்கொள்வீர். (பட்)

லே:—தூதர்காள்! நான் சொன்னவைகளில் உங்களுக்கு என்ன தேவை? இதற்கு வேண்டிய தின்பண்டங்களும் தயார்செய்து வைத்திருக்கின்றேன். அதையும் சொல்லுகின்றேன்; கவனியுங்கள்.

பாட்டு

(மனமயிலேமிட்டே என்ற மெட்டு)

ஆட்டுக்கறி கருவாட்டுமண்டே-ஒரு
கூட்டுக்கறி பெருவரட்டு
சிறுகாடைக்கறி கௌதாரிக்கறி-நல்ல
காட்டுக்கோழி பொருகூட்டு
மீனுக்கறி வான்கோழிக்கறி-உலை
மானிறைச்சி நெய்போட்டு

மசால்வறுத்த கோழிகளின்	முட்டை	நல்ல
வகைவகையான சோம்புப்	பட்டை	
தடவிசுட்டநெய்யில் இதுவாட்டி	முட்ட	நல்ல
வகையிருக்குது	கிட்ட	(ஆ)

லே;—இன்னும் சொல்லுகின்றேன் கேளுங்கள்,

(டப்பா குலுக்குக்காரி என்றமெட்டு)

பாட்டு

லட்டு மிட்டாய் பூந்தி முறுக்கு மசால்வடை
செட்டுச் செட்டாகக் கொஞ்சம் வேண்டுமா
சேந்தி அல்வா காரா பூந்தி முதற்கொண்டு
ஓமப்பொடி முறுக்கு வேண்டுமா

லே. வ-ம்:—தூதர்காள்! உங்களுக்கு வேண்டியதைக் கேட்டு நன்ருய்ச் சாப்பிடுங்கள்.

லே:—சேவகா! இவர்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுத்து உற்சாகப்படுத்து.

[தூதர்கள் குடிவெறியால் தள்ளாடிக் கீழே விழுகின்ருர்கள்.]

லே:—தூதர்களிடமிருக்கும் லிகிதத்தை எடுத்துப் பார்த்து ஓஹோ! என் மனதிற் கொண்ட சந்தேகம் உண்மை யாகிவிட்டது. ஞானசௌந்தரி என்பதற்குச் சந்தேகமே இல்லை. என்ன அன்பு, என்ன ஆசை, தாயையும் குழந்தைகளையும் அதிக ஜாக்கிரதையுடன் பார்க்கவேண்டுமாமே. இனி நான் சும்மா இருக்கப்படாது. இதைப்போல் வேறு கடிதம் எழுதி குழந்தைகளையும், தாயையும் காட்டில்கொண்டு வெட்டிவிடும்படி எழுதி விடுகின்றேன். இல்லாவிடில் இவளிருப்பது எனது கணவருக்குத் தெரிந்தால் நமது உயிருக்கே ஆபத்தாக முடியும் நல்லது நமது வேலையைத் தொடங்கலாம்.

[தூதர்களிடமிருந்த லிகிதத்தை எடுத்து வேறு கடிதம் எழுதிவைக்கின்ருள்]

லே. வ-ம்:—சேவகா! சீக்கிரம் இவர்களை எழுப்பி அனுப்பிவிடு.

[தூதர்கள் எழுந்து ஓடுகின்ருர்கள்.]

[சிமியோன் மகாராஜா தனியிடம்.]

தூத. வ-ம்:—பிரபு! (கடிதத்தைக் கொடுத்தல்)

சிமி. வ-ம்:—தூதர்காள்! குமாரன் பிலேந்திரன் முற்றிலும் சுகமா?

தூத. வ-ம்:—மகாராஜ்! நல்ல சௌக்கியம்?

சிமி. வ-ம்:—(லிகிதத்தைப் பிரித்துப்பார்த்து) என்ன! இது ஆச்சரியமாய் இருக்கிறது. ஏன் இவ்வாறு எழுதி அனுப்பினன் ஒரு காரணமுமின்றி ஞானசௌந்தரியையும், குழந்தைகளையும்கானகத்திற் கொண்டுபோய் கொலைசெய்து விடும்படி எழுதி அனு

ப்பி இருக்கின்றானே? ஏ! ஜெகத்ரக்ஷகா யான் எவ்விதமாக இச் செய்கைக்கு மனந்துணிவேன்.

சிமியோன்-பாட்டு

(நம்பினேனுன்னையே என்ற மெட்டு)

பல்லவி

என்னசொல்குவேன் என்வாய்திறந்து-இந்தவேளை (என்)

அநுபல்லவி

சொன்னசொல்-மீறியதுண்டோ இன்னல்வார்-ததும்புமுண்டோ
என்சொல்வேன்யா-னிந்தவேளை என்னருமை-ஞானத்திற்கு

சிமி. வ-ம்—ஆ! கர்த்தனே! ஒன்றுமறியாத உத்தமகுணம் பொருந்திய ரத்தினங்களை இவன் விகிதத்தின்படி செய்யத் துணிவேனாகில் உலகத்திலுள்ள ஜனங்களின் வசைக்காளாவது மின்றி? கர்த்தனின், காருண்ய செய்கைக்கு முற்றிலும், பாவஞ்செய்தவனாவேன். இதை நினைத்தால், குமாரன் அரண்மனைக்கு வர மாட்டேனென்றும் எழுதி இருக்கின்றான். நல்லது, விதியை வெல்ல யாரால் முடியும். எல்லாம் அவன் செயல்.

யாரடா அது, அந்தப்புறஞ் சென்று ஞானத்தையும், குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வா.

ஞா:—மாமா! வந்தனம்; என்னையழைத்த விஷய மென்னவோ.

சிமி:—அம்மா! உன்னிடம் சொல்வதற்கே என் மனம் சஞ்சலமடைகின்றது. என்ன செய்வது. இருந்தபோதிலும் சொல்லுகின்றேன். உன்னையும், உன் குழந்தைகளையும் கானில் கொண்டு போய்க் கொலை செய்துவிடும்படி கடிதம் எழுதி இருக்கின்றான். எனக்கே ஆச்சர்யமும் துக்கமும் மேலிடுகின்றது.

ஞா:—என் நாயகருக்கு என் மீது இவ்வளவு கோபமுண்டாவதற்கு அடியாள் செய்த குற்ற மின்னதென்று எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் கர்த்தனின் கட்டளைக்கு நான் என்ன செய்வது தாங்கள் தான் என்ன செய்வது விதிப்படிதான் நடந்தேறும். யானோ இருகாரமுமில்லாத நிரபராதி எனது கணவர் உத்திரவின்படி வெட்டிவிட்டால் இன்பதுன்ப மில்லாமலே போய்விடும். மேலும் என்னையும் என் குழந்தைகளையும் காட்டில் விட்டுவிட்டால் இக்குழந்தைகளை நான் எவ்விதம் காப்பாற்றுவேன்.

சிமி:—அம்மா! துயருறாதே ஏதோ காலவிதிப்பயனால் இவ்விதக் கடிதம் எழுதி இருக்கின்றான். நான் அவன் எழுதினபடியே

நடந்தால் இப்பாவத்தை எவ்வாறு நீக்குவேன். குழந்தைகளை எவ்வளவு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள். எல்லாவற்றிற்கும் நமைப் படைத்த கர்த்தரொருவன் இருக்கின்றார்; உனக்கு இச்சமயம் துணை புரிவார். என் மனமானது காற்றெதிரிற் பட்ட கொடிமரத்தின் பட்டாடைபோல் சஞ்சலிக்கின்றது. அம்மா, நீ யாதொன்றுக்கும் வருந்தாதே உனக்குத் துணையாக குழந்தைகளை இவர்கள் எடுத்து வருவார்கள் என்னை மன்னிப்பாய்.

ஞா:—மாமா! எனக்காகத் தாங்கள் ஏன் வருந்துகின்றீர்கள். என் நாயகருடைய உத்திரவின்படி நடக்கச் சித்தமாய் இருக்கின்றேன். யான் சென்று வருகின்றேன் உத்திரவு கொடுங்கள்.

[சிமியோன் விசனித்து மூர்ச்சை யடைகின்றான்.]

(ஞானசௌந்தரி குழந்தைகளோடு வனமேகுதல்)

ஞானம்-பாட்டு

(தில்லாம்திரி என்ற மெட்டு)

கண்ணிகள்

ஏனோயிந்த ஜென்மந்தானே
நானோ தோஷி யானேன்
பரனே வந்தருள்வாய் தானே
பாதா யேசு நாதா (ஏ)

கரமில்லாத கஷ்டத்தோடு
வனமே வந்து உய்வேன்
உயிரை மாய்க்கக் குழந்தை ரெண்டு
உருகு தென்ன செய்வேன் (ஏ)

ஞான:—ஆ! கர்த்தனே, மரித்தாயே! தேவரக்ஷகா, ஐயோ! என்னையும் ஓர் பெண்ணாகப் படைத்தனையே, ஆ மரித்தாயே! நான் முன் ஜென்மத்தில் யாருக்கு என்ன தீங்கிழைத்தேனோ? என்ன கஷ்டங்களைச் செய்தேனோ? என்ன பாவம் புரிந்தேனோ? இச் ஜென்மத்தில் சிறு வயதிலேயே அன்னை யிழந்து சிற்றன்னையிடம் கஷ்டப்பட்டுக் கானில் வந்து கரமிழந்து தவிக்கும் சமயம் ஏதோ பூர்வ புண்ணியபலன் கொஞ்ச மிருந்ததினால் கொஞ்ச காலம் சுகமாக இருந்து இக்குழந்தைகளையும் பெற்று மறுபடியும் கரமில்லாமல் சிசுக்களை வைத்துக்கொண்டு கஷ்டமடையும்படி கர்த்தனின் கட்டளையோ, ஐயோ! இக் குழந்தைகளை எவ்வாறு காப்பாற்றுவேன் ஆ அன்னையே, எனக்கு இச்சமயம் உன்னைத் தவிற துணைபுரிய வேறு யாருமில்லையே. யான்

என்னகுற்றம் செய்தபோதிலும் எனக்கு இச்சமயம் என்னை வேண்டி இக்கானகத்தில்,

ஞானசௌந்தரி-பாட்டு

(யார்போய்ச் சொல்லுவார் என்றமெட்டு)

யார்போய்ச் சொல்லுவார்
இந்தவேளை யென்னைவேண்டி கர்த்தனுக்கோடி (யார்)

சின்னஞ்சிறுவயதில் அன்னைதனை யிழந்து
தந்தையெனை வளர்த்துத் தனிமையாக விடுத்து
தாயார்சிற் றன்னைதன்னால் கரங்களிழந்தேனென்று (யார்)

கர்த்தன்கிருபையினால் கல்யாணம் தான்முடிந்து
பூர்த்தியாய்க் குழந்தைகள் இரண்டுஜெனித்ததென்று
புவிதனில் குற்றமில்லா புனத்திற்கு வந்தேனென்று (யார்)

ஞா. வ-ம்:—ஆஹா! என்காலகதி இவ்வாறிருக்குமென்று எண்ணாமற் போனேனே என் நாதருக்கு என்ன குற்றம் செய்தேன். குழந்தைகள் பசி பொறுக்க முடியாமற் சோர்வடைகின்றார்களே. ஆ! கர்த்தனே ஏசுநாதா! உனதருள் இப்படியும் சேர்ந்ததோ ஆ! (சோர்வடைகின்றாள்)

[முனிவர் வருகின்றார்]

ஞானசௌந்தரி-பாட்டு

(என்முகம் பார்த்தருளய்யா என்றமெட்டு)

பல்லவி

மாதவஞ்செய்திடும் முனியே-இரு
மைந்தரோடென்தனைக் காத்திடுந்தனியே (மா)

அநுபல்லவி

பாதவணக்கஞ்செய்யக் கரமில்லாததனாலே
சிரங்குவிந்திங்கனஞ் செய்தேன்முன்னாலே (மா)

என்குரு சங்கர லிங்கஞ்சொல்போலவே
தன்னிரு குழந்தையும் தற்காரும்குருவே (மா)

ஞா. வ-ம்:—சுவாமி! தங்களைப் பணிய இரண்டு கரங்களு மற்றவளாதலால் சிரம் வணங்கினேன் மன்னித்து இக்குழந்தைகளின் பசிப்பிணி தீர்த்தருளல் வேண்டும்.

முனி:—அம்மா! துயருறாதே; எல்லாம் நம்மாலாவதல்ல உன்னைக் கர்த்தனாகிய இயேசுநாதர் ரக்ஷிப்பாராக. என்னுடன் வந்து

சிலநாட் தங்கி இரு உனக்கும் குழந்தைகளுக்கும் வேண்டிய சௌகரியங்கள் செய்கின்றேன்.

ஞா:—நல்லது; அப்படியே தங்கள் மனம்போல் நடக்கக்கடவேன்.

[முனிவர் குழந்தைகளையும் ஞானத்தையும் அழைத்துப்போகின்றார்]

மலைக்குகை

முனி:—குழந்தாய்! ஞானசௌந்தரி குழந்தைகளைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொண்டிரு. நான் சென்று சில கனிவர்க்கங்கள் பறித்து வருகின்றேன்; ஜாக்கிரதை.

[போகின்றார்]

ஞா:—நல்லது; சென்றுவாருங்கள்.

ஞானம் புலம்பல்-பாட்டு

(என்னைச்சுட உன்னைப்பெற்றேன் என்ற அரிச்சந்திரா மெட்டு)

இராகம்-கேதாரம், தாளம்-ஆதி.

மலையோ வனம்-அடர்ந்த காடு
மாதவ முனிவர் வீடு
தங்கியிருப்-பீ ரென்னோடு
மைந்தரே நம் நாடு (மலை)

உன்னையன்றித் துணைவேறில்லை
அன்னைமரியாளோ இல்லை
சிசுக்கள்பசி பெருந்தொல்லை
சிறியாள் மனம் வல்லை (மலை)

[தேவமாதா தோன்றுதல்]

தே. வ-ம்:—எனது அன்பான குழந்தாய் ஞானசௌந்தரி! அஞ்சாதே இச்சமயம் உனக்கு வேண்டிய உதவி புரிகின்றேன், வேண்டியதைக் கேள்.

[ஞானசௌந்தரி தேவமாதாவை தெரிசனஞ்செய்தல்]

ஞானசௌந்தரி-தரு

(பாவிமாரன் கணைகளைந்தும் என்ற மெட்டு)

இராகம்-பியாக், தாளம்-ஆதி.

ஞா. கோடிசூர்ய-காந்திமேனி
கொண்டதால்-கண் கூசுதே

தே. ஆதரவில்லாததாலே
அடியாள்வந்து-தோன்றினேன்

ஞா. உனைப்பணியக்-கரமில்லையே
உதவிசெய்வீர்-அன்னையே

தே. கரமளித்தேன்-கவலைவேண்டாம்
வரங்கொடுப்பேன்-வனிதையே

ஞா. வ-ம்:—மேரித்தாயே! தங்களைச்சேவித்து நிற்கும் பாக்கியமே பாக்கியம் குழந்தைகளை யாதரிக்கக் கரமில்லாதபாவியா யிருக்கின்றேன் தாயே?

தே. வ-ம்:—அன்பான! குழந்தாய் உனக்கு முன்போல் கரங்கள் வளரக்கடவது. இதோ; உன் திருக்குழந்தைகளுக்கு அப்பம் கொடுத்தேன் பெற்றுக்கொள். இனி உனக்கு யாதொருகுறைவு முண்டாகாது? சுகமாய் வாழ்வாய் கவலைவேண்டாம் யான சென்று வருகின்றேன்.

[ஞானம் கரங்களைப்பார்த்து]

ஞா. வ-ம்:—உலகத்தை ரக்ஷிக்கும் தாயே! அன்புடைய மாதாவே! ஸ்தோத்ரம் செய்கின்றேன. [தேவமாதா மறைதல்]

சீன்-7. **இடம்-எகிப்துதேசம்.**

பாத்திரங்கள்-பிலேந்திரன், சிமியோன், பாதிரி, முதலியோர்கள்

பிலே. வ-ம்:—பிதா! வந்தனம் புரிகின்றேன்.

சிமி. வ-ம்:—கண்மணி! மங்களமுண்டாகட்டும் ஆசனத்தில் அமருவாயாக?

பிலே. வ-ம்:—பிதா! ஏன் ஒருவித முகவாட்டமாய் இருக்கின்றீர்கள்? குழந்தைகள் க்ஷேமமாய் இருக்கின்றார்களா?

சிமி:—கண்மணி! பிலேந்திரா நீ எழுதியனுப்பிய லிகிதமே என்னை இவ்வாறு விசனமுறச் செய்தது.

பிலே:—தந்தாய் கடிதத்தில் யான் ஒன்றும் தவறுதலாக எழுதவில்லையே.

சிமி:—கண்மணி! நீ எழுதிய லிகிதத்தில் ஞானசௌந்தரியையும், குழந்தைகளையும் கானில் கொண்டுபோய்க் கொலைபுரியும்படி எழுதி இருக்கின்றாயே இதோ உன் கடிதத்தைப் பார்.

[கடிதத்தைக் கொடுக்கின்றார்]

பிலே:—(கடிதத்தைக் கண்ணுற்றுக் கீழே விழுந்து மூர்ச்சையடைகின்றான்) ஆ, தந்தாய்! இக்கடிதத்தில் உள்ளபடி செய்தீர்களா? நான் ஒன்றும் எழுதவில்லையே. கடிதம் ஏதோ சூதாக இருக்கின்றதே; நான் என்னசெய்யப் போகின்றேன். ஆ கர்த்தனே! என் தலைவிதி இப்படியும் நேருமோ? கடவுளே! கர்த்தனே! யேசுநாதா! அய்யோ!

பிலே-தரு

(மாண்டனளோ ஆசை தந்த என்ற கோவலன் மெட்டு)

இறந்தனளோ என்னருமைச் சௌந்தரியாள்
என்னை-எண்ணிமனம் தூஷித்தாளோ
காதலியாள்-இருமைந்தரோ டெங்கு (இ)

(தொகையறு)

கர்த்தனே வுன்செயலிதுவோ-இந்தக்
கஷ்டத்திற் காளாகச் செய்தாய்-இனி

(ஷை மெட்டு)

யார் பொறுப்பா ரிந்தத் துன்பம்
ஆனால் என்போல்-தந்தை சொல்படி எங்கு (இ)

(தொகையறு)

போருக்குப் போகும்வேளை-என்னைப்
போகவேண்டாமென்று தடுத்து-இந்தப்

(ஷை மெட்டு)

பாவிமனம்மே கலங்கியே புலம்ப
ஏசுநாதனே-எங்கு (இற)

பிலே. வ-ப்:-ஆ, என தருமை ஞானசௌந்தரியே, யான் போருக்குப் போகும் சமயம் நீ தடுக்க யான் மீறிப்போன பலாபலன் மீண்டு முன்னைக் கண்ணால் பார்த்து வைக்காத பாவியானேனே. ஆ தந்தையே என்னுயிர் இனி யரைக்ஷணமேனும் நில்லாது; மகா பாதகனாகிவிட்டேனே. இவ்வாறு லிகிதம் எழுதிய என் கரத்தை வெட்டிவிடுங்கள் ஆ! தேவ தேவா ஏசுநாதா!

சிமி. வ-ம்:—கண்மணி பிலேந்திரா பொறு பதறாதே. உன் லிகிதப்படி செய்ய மனந்துணியாமல், உன் கடிதத்திற்காக, குழந்தைகளையும், ஞானத்தையும் கானிற்கொண்டுபோய் விட்டுவிடும்படி

உத்திரவிட்டேன்; ஏனென்றால், இவ்விதம் செய்யாவிடில் நீ அரண்மனைக்கு வரமாட்டேன் என்று எழுதி இருந்தபடியால் இவ்விதம் செய்தேன். நீ துயருறாதே சீக்கிரம் நமது வேலையாட்களை அனுப்பி அழைத்து வரும்படி செய்கின்றேன்.

பிலே:—தந்தாய்! இதுவும் கர்த்தனின் சோதனைதான். இதோ யானேசென்று எனது அருமை நாயகியும், குழந்தைகளையும் கண்டு அழைத்து வருகின்றேன்.

[பிலேந்திரன் புலம்பிக்கொண்டே போகின்றான்.]

சிமி:—யாரடா அது, நமது அரண்மனை வேலையாட்களில் சிலர் பிலேந்திரனோடு போய்வாருங்கள் சீக்கிரம்.

சேவ:—நல்லது மகாராஜா உத்திரவுப்படியே. [போகின்றார்கள்.]

பிலேந்திரன்-தரு

(ஆ என் ஜானகியை என்ற மெட்டு)

காலவினைப்பயனோ கர்த்தனின்-சோதனையோ
கலங்குதே-யென்மனம் கர்த்தனே-கர்த்தனே-கர்த்தனே
போருக்குப்-போகும்வேளை புலம்பி-யெனைத்தடுத்து
போகவேண்டாமென்றாயே கர்த்தனே-கர்த்தனே-கர்த்தனே

பிலே. வ-ம்:—தேவாதி தேவனே! ஏசுநாதனே! மரித்தாயே! இவ் வனத்தில் என் மனைவியையும், குழந்தைகளையும் காணவில்லையே, இன்னும் பார்க்கின்றேன் காணாவிடில் இக்ஷணமே எனது வாளால் யான் உயிர்துறக்கச் சித்தமாய் இருக்கின்றேன் ஏழைக் கிரங்கலாகாதா? கருணாகரா எல்லா முனதருள்தான்.

[ஞானசௌந்தரி இருகுழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வருகின்றாள் பிலேந்திரன்பார்க்கின்றான்]

ஞா:—எனது! அருமைக்குழந்தைகாள்! வாருங்கள் போகலாம்.

பிலே:—என்ன இது! வருகின்றபெண் ஞானம்தான். இருந்தாலும் கரங்களிருக்கின்றன. (உற்றுப்பார்க்க) ஞான சௌந்தரிதான் சந்தேகமே இல்லை. சமீபத்திற்சென்று உபசரித்து அழைத்து வருவோம்.

[பிலேந்திரன் ஞானத்தைத் தழுவி குழந்தைகளை முத்த மிடுகின்றான்]

பிலே:—பிராணசகி! என்னை மன்னிப்பாயாக? இதுவரை என்மன மறிய உனக்கு எந்தவிதமான குற்றமுஞ் செய்யவில்லை. இது, உண்மை நம்புவாய் கண்மணி!

பிலே-தரு

(தசரதராஜகுமாரா என்ற மெட்டு)

கண்மணி ஞான சௌந்தரியே
சுந்தரியே துரந்தரியே வருவாயே

பெண்மணி யிந்நாள் வரை பிரிந்ததுமில்லை
பெரிதும் பெருங்குற்றம் புரியவு மில்லை
உண்மையெனப் புகலும் என்னருஞ் சொல்லை

உன்மனதி லுணர் சகியே
அருஞ்சுகியே இதுதகியே என்மதியே (க)

ஞானம்-தரு

முன்செய்த வினைப்பயனாலே
கண்ணாலே மரியாளே கண்டேனே

அன்னை தெரிசனம் தனில்கரங் கொண்டேன்
என்னருஞ் செயலினால் மரியாளைக் கண்டேன்
பரவுமரி யன்னைப் பாக்கியங் கொண்டேன்

இதுதகி எனக்குமே காடு-சொந்தவீடு
அருளோடு நீர்நாடு (முன்)

ஞா வ-ம்:—அன்புடையீர் நீர் துயருற வேண்டாம். எல்லாம் கர்த்தனின் செயல். இவ்வாறு நடந்த காரணத்தினாலேயே மரித்தாயின் காக்ஷியை நேரில் கண்டு கரங்களைப் பெற்று வரமும் பெற்றேன். இல்லாவிடில் எனக்குக் கரமேது இதுவுமென் பாக்கியமே பாக்கியம். எல்லாம் தமதருள் தான். குல மகட்குத் தெய்வம் கொழுநன் தானே, ஆனதினால், இனி நாட்டுவாசத்தைப் பார்க்கிலும் எனக்கிந்தக் காட்டுவாசமே மேலானது நாதா!

பிலே:—எனதருமைக் கண்ணே! ஞானசௌந்தரியே! எல்லாம் கர்த்தனின் செயல் எத்தனையோ மகான்கள் கர்த்தனைக் காண அருந்தவம் புரிகின்றார்கள் முடியவில்லை. உனக்குப் பிரசன்னமாகி வரப்பிரசாதம் பெற்றதை எண்ணிடில் நீயே தெய்வம், நான் போரில் ஜெயம் பெற்றதில் தருமராஜர் நம்மிருவரையும் வரும்படி செல்லியனுப்பி இருக்கின்றார். ஆனதினால் நாமிருவரும் உரோமாபுரிக்குச் சென்று தருமராஜரைப் பார்த்துவிட்டு பின்பு நமது ராஜ்பத்திற் கேகுவோம். இனிமேல் அரைக்ஷணமேனும் உனைவிட்டுப் பிரியேன் இது சத்தியம். உனது அபிப்பிராய மெப்படி?

ஞா:—நாதா! "பெண்டிற்கழகு எதிர்பேசாதிருத்தல்" என்னும் பழமொழிப்படி யான் என்ன சொல்லப் போகின்றேன். நாதா! தங்களுடைய இஷ்டம்போல் செய்யுங்கள்.

[பிலேந்திரன் குழந்தைகளேயும் ஞானத்தையுமழைத்துக்கொண்டு உரோமாபுரிக்குத் தருமராஜனிடம் செல்லுதல்.]

சீன்-8. இடம்-உரோமாபுரி.

பாத்திரங்கள், தருமராஜன், பிலேந்திரன், ஞானசௌந்தரி, மந்திரி முதலியோர்கள்.

தரு:—பிலேந்திரரே! வரவேண்டும் வரவேண்டும். ஆசானத்திலமருங்கள்.

பிலே:—தருமராஜாரவர்களே! தங்களுத்திரவின்படி என்னுடைய குழந்தைகளேயும்,மனைவியையும் அழைத்து வந்திருக்கின்றேன்.

தரு:—மெத்தச் சந்தோஷம். எங்கே குழந்தைகள் அழைத்து வாருங்கள்.

[பிலேந்திரன் அழைத்து வருகின்றான்.]

தரு:—பிலேந்திரரே! இந்த ஆபரணங்களைத் தங்கள் மனைவிக்குக் கொடுக்கின்றேன் பெற்றுக்கொள்ளுங்கள்.

[பிலேந்திரன் நகைப் பெட்டியை வாங்கி ஞானசௌந்தரியிடம் கொடுக்கின்றான்.]

ஞா:—(ஞானசௌந்தரி பெட்டியை வாங்கிப் பார்த்து) நாதா இந்த நகைகள் என்னுடைய நகைகள்போ லிருக்கின்றதே.

தரு:—என்ன! கண்ணே உன்னுடைய நகைகளா? (உற்று நோக்க) ஞானமும் (தருமர் முகத்தை உற்றுப் பார்த்து,)

ஞா:—ஆ! என்னை வளர்த்த தந்தையே. (இருவரும் கட்டிக்கொள்ளுகின்றார்கள்.)

தருமராஜர்-தரு

(பட்டாபிஷேகம் படைத்த மெட்டு)

கர்த்தனின்செயலினல் கண்ணேயுனைக்கண்டு
களிப்புற்றயானும் சந்தோஷங்கொண்டேனம்மா
மனதில்வெங்தோஷம் வேண்டாமம்மா நடந்த
வரலாறுஎனக்கறியவேண்டும் கண்மணிசௌந்தரியே (க)

தரு. வ-ம்:—என தருமைக் குழந்தாய்! ஞானம் உன்னைக் காணும்படி செய்த ஏசுநாதனின் மகிமையை என்னவென்று சொல்லுவேன். பிலேந்திர மகாராஜரே! தங்களுடைய சகாயம் எவ்விதம் கிடைத்தது நானறியக் கூடுமோ?

ஞானம்-தரு

(ஷை மெட்டு)

கர்த்தன் செயலென்று களிப்புற்றிருந்திடும்
காரிழை-கதையைக் காதினில் கேட்பீரப்பா
கவலை கொள்ளா தீரெந்த னப்பா
கரங்குவித்து அடிபணிந்தேன்
மனமகிழ்வீர்-மகிழ் புரிதந்தையரே (கர்)

பிலேந்திரன்-சிந்து

வேட்டைக்குயான் சென்றவிடத்தில்-கேட்டே
னழுகுரலைநின்றுமனம் கானவிடத்தில்
இரத்தவெள்ளம் கரைபுரளவே-இரு
கரங்களும்வெட்டுண் டிவள்மருளவே
கன்னியையான் அழைத்துமேசென்றேன்-தந்தை
காரணத்தைமுன்னிட்டுயான் கல்யாணம்செய்தேன்
குழந்தைரெண்டு தான்பிறந்தது-கன்னி
மரித்தாயினருளினலே கரம்வளர்ந்தது (வே)

பிலே. வ-ம்:—தருமராஜாவே! கானகத்தில் வேட்டைக்குச் சென்ற சமயம் கரங்கள் இழந்து கானில் புலம்பிக்கொண்டிருந்தாள். சமீபத்தில் சென்றுவினவ மாற்றாந்தாயின் துன்பத்தினுல் இவ்விதம் நேரிட்டது என்றும், தன்பெயர் ஞானசௌந்தரி என்றும் தாய்இல்லைஎன்றும் தந்தைபெயர் ஊர்பெயர் தெரியாதென்றும் தெரிவித்தனள். எனது அரண்மனைக்குச்சென்று சௌக்கியப்படுத்தி விவாகம் செய்துகொண்டேன். பின்பு தேவமரியாள்! கிருபையால் கரம்வளர்ந்து இங்கு அழைத்துவந்தேன்.

[இதைஎல்லாம் ஒண்டிக்கேட்ட லேனள் நடுக்கமுறல்]

தரு. வ-ம்:—சேவகா! அக்கொடியாளாகிய லேனளை இங்கு அழைத்துவா சீக்கிரம். [லேனள் வருகின்றுள்.]

தரு:—அடிதுஷ்டி! சண்டாளி எனது குழந்தையை அநியாயமாய்க் கொலைசெய்ய நினைத்துப் பலவிதத் துன்பத்திற் காளாக்கிக் கானில் துரத்தி கரத்தையும் வெட்டி விட்டாய். இனி உன்னைச்


அனுபவ

ஹஸ்தரேகை சாஸ்திரம்

(சக்திதாஸன் எழுதியது.)

நூற்றுக்கணக்கான படங்களுடன் கூடியது: விலை ரூபா 2.

விளக்கமான அநேக படங்கள் அடங்கிய இச்செந்தமிழ் வசன நூலறிவினால் ஆயுள், விவாக லாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு, சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி, ஐசுவரியம், கண்டம், ஜயம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரிய சித்தி, சௌக்கியம், தயை, அஜீரணம், இல்லற சுகம், மரணம் முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். அன்றியும், இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங்களையும், இன்னம் அனேக மர்மங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது. முக்காலவரலாறுகளையும் அறிய இவ்வனுபவ நூல் துணையாகும். உங்கள் கையிலுள்ள ரேகைப் பலன்களை சுலபமாய் நீங்களே தெரிந்துகொள்ளலாம்.



B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 41, வெங்கடரூமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

நாவல் எழுதும் ஆற்றலில் மிகப் பிரசித்திப் பெற்றவரும்,

தங்கமெடல்கள் பரிசுப் பெற்றவருமான

வடுவூர். K. துரைசாமி ஐயங்கார் எழுதிய

இனிய தமிழ் நாவல்கள்

1. பூர்ணசந்திரோதயம்	4-பாகம்	....	....	7	8	0
2. மதனகல்யாணி	3 ,,	....	....	4	8	0
3. சௌந்தரகோகிலம்	3 ,,	....	....	6	0	0
4. கும்பகோணம் வக்கீல்	2 ,,	....	....	3	0	0
5. திகப்பரசாமியார் பாலிப லீலை	2 ,,	....	....	5	0	0
6. மாயாவிநோதப்பரதேசி	2 ,,	....	....	5	0	0
7. மேனகா	2 ,,	....	....	3	0	0
8. பாலாமணி	....	....	....	2	8	0
9. வசந்தமல்லிகா	....	....	....	1	8	0
10. வித்தியாசாகரம்	....	....	....	1	4	0
11. திவான் லொடபடசிங்	....	....	....	0	12	0
12. திலோத்தமா	....	....	....	0	12	0
13. மாணிக்கவாசகர்	....	....	....	0	8	0

மதுரை

K. குற்றாலப்பிள்ளை அவர்களியற்றிய

டிராமா சரித்திரங்கள்

ஞானசௌந்தரி	...	...	...	0	4	0
அல்லியர்ச்சுன	...	...	...	0	4	0
கோவிலன்	...	...	...	0	6	0
அரிச்சந்திரா	...	...	...	0	4	0
வள்ளிதிருமணம்	...	...	...	0	4	0
நந்தனர்	...	...	...	0	4	0
பவளக்கொடி	...	...	...	0	4	0
சாரங்கதரா	...	...	...	0	4	0
சம்பூர்ண இராமாயணம் 12-பாகங்களடங்கியது				2	0	0
(தி. நாராயணசாமி பிள்ளை கம்பெனியில் நடத்தியது)						
(ஷை கம்பெனி) லவகுச ...	...	...		0	4	0

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடருமய்யர் தெரு, மின்ட்பில்டிங் போஸ்டு, சென்னை.

நெ. 41